உ

இராமலிங்க அபயம் துணை

# வள்ளலார் துதி

## வள்ளலார் அடியார்கள் பாடியது

தொகுப்பு

**மு. பாலசுப்ரமணியன்**

98, நேரு தெரு, ஆழ்வார் திருநகர், சென்னை - 600 087.

தொலைபேசி : 044-24862835

இராமலிங்க அபயம் துணை

# முன்னுரை

நம்மை எல்லாம் திருத்திச் சன்மார்க்கச் சங்கத்தில் சேர்த்து இங்கேயே இறைவனை அடைந்து என்றும் இன்புற்று வாழ வைக்க ஆண்டவனால் அனுப்பப்பட்டு வந்தவர் திருவருட் பிரகாச வள்ளலார் என்று போற்றப்படும் இராமலிங்க அடிகளார்.

உயிர்கள் படும் துன்பங்களையே நீ அடைந்து விலக்குக என்று வள்ளலாருக்கு ஆண்டவன் கட்டளை யிட்டுள்ளான். ஆண்டவனின் வாக்கை உற்று நோக்கி நாம் வள்ளலாரிடம் முறையிட்டோமானால் நம் துன்பங்கள் நீங்கும் என்பது புரியும். எல்லார்க்கும் கடையாய் இருந்தேனுக்கருள் புரிந்து எல்லார்க்கும் துணையாய் இருக்க வைத்தாய் எம் பெருமான் என்று வள்ளலார் பாடுவதிலிருந்து நமக்குத் துணை வள்ளலாரே என்பதும் புரிகிறது. எனவே நமது குறைகள் நீங்கி நாம் இன்பமாக வாழ ஒரே வழி வள்ளலாரைப் போற்றுவதும் வாழ்த்துவதும் வணங்குவதும் அவரிடம் முறையிடுவதும் ஆகும்.

திரு அருட்பா வெளியிடுகின்றோர், நம் பெருமானாரையும் அவர் வாய் மூலமாக வெளிப்பட்ட இறைவனின் வாக்காம் திருவருட்பாவையும் போற்றி அடியார்கள் பாடிய பாடல்களை உடன் சேர்க்காது விட்டுவிடுவதால் அவைகள் மக்கள் மத்தியிலிருந்து மறைந்துவிடுமோ என்ற அச்சம் தோன்றியது.

அந்த அவல நிலையைத் தவிர்த்து வள்ளலாரை மக்கள் புரிந்து கொள்ளவும், அவரை வணங்கி எந்த விதத் துன்பமும் இல்லாமல் இன்பமாக வாழ வைக்கவும். இந்தப் புத்தகம் வெளி வருகின்றது.

வள்ளலாரை வணங்குவோம் !
வாழ்வோம் !

அன்புடன்

**மு.பாலு**

இராமலிங்க அபயம் துணை

உலகந் தழைக்க வந்துதித்த உருவே வருக ஓதாதே
உற்ற கலைகள் அனைத்தினையும் உணர்ந்தோய் வருக ஒன்றிரண்டற்று
இலகும் பரமானந்த சுக இயல்பே வருக இம்பர்தமை
இறவாக் கதியிலேற்றுகின்ற இறையே வருக எம்போல்வார்
கலகம் தவிர்த்துக் கதியளிக்கும் கண்ணே வருக கண்ணிறைந்த
களிப்பே களிப்பிலூறுகின்ற கனிவே வருக கலைமதிதோய்
வலகம் செறிந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 1

வெளியில் சிறந்த சுத்த பரவெளியே வருக வெம்மலமாம்
வெய்ய திமிரம் ஒழிக்க வரும் விளக்கே வருக வேதாந்தத்
தளியிற் சிறந்த மௌன நறுந்தருவே வருக சன்மார்க்கம்
தழைக்க உலகில் அவதரித்த தலைவா வருக சமநிலையாம்
அளியிற் சிறந்த பெருங்கருணை அப்பா வருக ஆப்தரெல்லாம்
அண்ணிப் பரவும் புண்ணிய மெய்யருளே வருக வதி நலஞ்சேர்
வளியிற் சிறந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 2

கருணை நிறைந்து வழியும் அருட்கடலே வருக கற்பகத்திற்
காய்த்து முதிர்ந்து பழுத்த நறுங்கனியே வருக கருதுகிற்போர்
இருணையுறவே யெரிவிளக்காம் இறையே வருக எழுமையினும்
இம்மையம்மைப் பயனளிக்கும் எந்தாய் வருக இடர் செயுமோர்
மரணந் தவிர்த்து வாழ்வளிக்கும் மருந்தே வருக என்னிதய
மலரை மலர்த்தும் வான் சுடரே செம்மணியே வருக வழுத்தரிதாம்
வருண நிறைந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 3

வேத முடிவில் விளங்கும் அருள்விளக்கே வருக மெய்ஞ்ஞான
வீட்டின் பயனாய் ஓங்குகின்ற விருந்தே வருக விளங்குபர
போத மயமாய் ஓங்கும் உயர் பொருப்பே வருக ஆனந்தம்
பொங்கித் ததும்பி வழியும் அருட்புனலே வருக பூரணமாய்
ஏத மகன்றார் உள்ளகத்தில் இருப்போய் வருக இதமகிதம்
இரண்டும் கடந்த இறுதி சுகம் ஈவோய் வருக எஞ்ஞான்றும்
வாத மகன்ற வடற் பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 4

செப்பும் –டாந்த நிலை முழுதும் தெரிந்தோய் வருக திரிவிதமாம்
தீக்கையுடையோர் பரவும் அருட்செல்வா வருக செகதலத்தில்,
ஒப்பும் உயர்வும் நீத்த பர உருவே வருக ஒற்றியிலே உவட்டா
அமுதம் உண்டு உவக்கும் உணர்வே வருக உறுபசியாம்
வெப்பு தவிர்த்துச் சுகமளிக்கும் விபுவே வருக விண்ணோரும்
வேண்டிப் பரவும் ஒரு தெய்வ வெளியே வருக விழுமியர்தம்
வைப்பென் றிலகும் வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 5

பக்தி சுவைக்கும் உயர்ஞானப் பழமே வருக பரவுகிற்போர்
பந்தம் தொலைக்க வந்த குருபரனே வருக பழிச்சரிதாம்
சித்தி நிலைகள் பலபுரிந்த சிவமே வருக முத்தேகத்
திறம்பெற்று அழியாது ஓங்கும் அருட்செல்வா வருக சிவயோக
முத்தி நிலையாம் சோபான மொழிவோய் வருக முழுதுணர்ந்த
முனிவர் அகத்தும் புறத்தும் ஒளிர்முத்தே வருக மூவாசை
மத்தர் அறியா வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 6

ஓடும் பொருளும் ஒன்றாய்க் கண்டுவப் போய் வருக ஓங்காரத்து
உண்மையறிந்த யோகியர்தம் உளவே வருக உவப்புடனே



பாடுந்தொழிலை மேற்கொண்ட பதியே வருக பதிநிலையிப்
பாரிலுரைக்க அவதரித்த பண்பே வருக பரிவுடனே
கூடும் அடியார் குழுவமர்ந்த குருவே வருக குணம் எனும் ஓர்
குன்றில் விளங்கும் எமது குலக்கொழுந்தே வருக குவலயத்தில்
வாடும் தகவில் வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 7

பாசக்கிழங்கைப் பறித்தெடுக்கும் பரசே வருக பழவடியார்
பகரும் வேத ராசியமாம் பண்ணே வருக பவப்பிணியை
நாசம் புரிந்து நலமளிக்கும் நட்பே வருக நாதாந்த
நடனங் காணும் திறலளித்த நாதா வருக நதிமதியம்
வீசும் சடையோன் அருள் வடிவாம் வித்தே வருக வியனிலத்தில்
விருப்பும் வெறுப்புமற்ற சுகவிழைவே வருக விளம்பு பல
வாசம் நிறைந்த வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 8

கண்டாலினிக்கும் அதிமதுரக் கரும்பே வருக காதலித்தோர்
கன்றங் கழியக் கண்களிக்கும் களிப்பே வருக கடவுளர்தம்
தொண்டால் யாவும் வருமென்றே சொல்வோய் வருக துரியபரஞ்
ஜோதி நிலையைக் காட்டவந்த துரையே வருக சூக்குமத்தை
விண்டாலனைத்தும் விளங்குமென விரிப்போய் வருக விண்ணோரும்
வேண்டும் பரமானந்த சுக விளைவே வருக வியன் பொழிலில்
வண்டார் வலம் சூழ் வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே 9

சாகாக் கல்வி கரை கண்ட சதுரா வருக சாந்தம் எனும்
தவளக் கலையை உடுத்தமர்ந்த தலைவா வருக சற்குணர்க்கே
வேகாக் காலை விளம்ப வந்த விபுவே வருக வெறி விலக்காம்
வெண்பா உரைத்த தமிழ்த்தலைமை வேந்தே வருக வியநிலத்தில்

பாகார் மொழியார் பற்றறுத்த பரமே வருக பக்திதனைப்
பாரில் எவர்க்கும் படவிரிக்கும் பாங்கே வருக பல்காலும்
வாகார் தெய்வ வடற்பதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளலெனுமோர் மாணிக்க மணியே வருக வருகவே
(கூடலூர் சிவதுரைசாமி தேசிகர்)

சீரார் கருணைக் கற்பக நற்றெய்வத் தருவே வருக
அருட்செம்மல் வருக மன்பதைக்கோர்
தெய்வப் பொருளே வருக பவந்
தீராப் பிணிக்கட்டவிழ்த்து மயல்தீர்த்து
கதிதந்தருளி என்றும் தெவிட்டாது
என்னுள் தித்திக்கும் தெய்வக் கனியே வருக நல்ல
ஏரார் பிரமவெளிக்குள் வளரினிய சச்சிதானந்த
இன்பக் கடலே வருக என்னுள் இனிக்கும் எந்தாய் வருக எழில்
காரார்ச் சோலை புடைவளரக்காக்கும்
வடலூரரசே என் கண்ணே வருக
இராமலிங்கக் கருணாநிதியே வருக வருகவே

சீரே வருக திருமருதூர்ச் சிறப்பே வருக
சிதம்பரராம் தேவே வருக சென்னை நகர்ச் செல்வா வருக தென்னகத்தின்
பேரே வருக இந்தியத் தாய் பெற்றோய் வருக
பரத கண்டப் பெரியோய் வருக இவ்வுலகப்
பெருக்கே வருக அருள்மழைபெய்
காரே வருக சிவஞானக் கதிரே வருக
எவ்வுயிர்க்கும் கண்ணே வருக இன்பநிறை கடலே வருக கருணை நதி
நீரே வருக தமிழ்மலை நீள்வான் மதியே வருக
அருள் நிலவும் வடலூர் இராமலிங்க நிமலா வருக வருகவே.



தொன்மைப் புலவோர் இதுவரையும் சொல்லுதலில்லா
ஒரு நூற்றுத் தொண்ணூற்றிரண்டு சீர்கொண்ட
தூய செய்யுள் செய்தருளி
முன் வைப்படியாய் வடநூலில் முழங்கும் மறையை
முழுதாக்கி மூன்றில் ஒரு பங்குத் தமிழை முதலுக்
கயலாம் படியாக்கிப்
பொன் வைப்பனைய தமிழ் இரண்டாப் பொதிந்து
மூன்றாம் அடியினிலே பொருந்து நான்கில் தமிழ்
முழுதாய் புகன்ற புகழ்ச்சிப் பாட்டினிலும்
நன்மைக் குரிய தமிழ்ப் பெருமை நவில்வோய்
வருக வருகவே நலமார் வடலூர் வள்ளல் குருநாதா
வருக வருகவே
பொய்யே நிறைந்த மனத்தினொடு
பொருந்தி வருந்தி நாள்தோறும்
பொழுதைக் கழித்த இவ் வெளியேம்
புண்ணியத்தின் வடிவாகி

மெய்யே நிறைந்த நினதருளை
மேவி உன்தன் திருவருட்பா
மேன்மைக் கருத்தே உணர்ந்துணர்ந்து
மேற்கொண்டொழுகி வீடு பெறச்

செய்யே என யாம் வேண்டுகிறோம்
திருவள்ளுவர் தம் சீர்க்குறளில்
திகழும் ஞானக் கருத்துக்களை
சேர வழங்கிக் கற்பித்து

நெய்யே கமழும் கறியமுது
நித்தம் அடியார் தமக்களிக்கும்
நிதிசேர் வடலூர்ப் பெருமானே
நிமலா வருக வருகவே

கற்றோர் கல்வி அறிவுகொடு
காணற்கொண்ணாப் பேரறிவும்
கல்விக் கடலின் நிலைகட்கோர்
கரை கண்டுணரும் சீரறிவும்

உற்றோர் பெரிய முனிவரென
உரை நக்கீரன் வாக்கிற்கே
ஒரு சான்றாகத் திகழ்கின்றோய்
உண்மைப் பொருளை புகல்கின்றோய்

மற்றோர் சொல்லேன் மாதேவ
மாலை ஒன்றே சாலும்மே
மாண்பும் நோன்பும் மிக்கோயெம்
மாட்டாற் சொல்லற்கேலும்மே

அற்றோர்க்கெல்லாம் உற்றோர் எம்
ஐயா வருக வருகவே
அருள்சேர் வடலூர் அப்பா எம்
அன்பே வருக வருகவே

(புலவர் **மா.க. காமாட்சிநாதன்**)



அருளுருக் கொண்ட ஒருவடிவு சிவயோகி வடிவான
நின்னரிய முடிமேல் அங்கே வளர்ந்த சிகை
மூன்று பிரிவுள்ளே நின்னரிய தாய் சின்னம்மைதான்
அருள் சிவனடிச் சேர்ந்த பின்னர் ஒரு சிகை கொண்டு
அரிய வெண்துகில் மேற்கொளிஇ அருட்பாதம்
ஏற்கும் நன்கிரு பாதரட்சைதனை அங்ஙனமகற்றி ஆளும்
இருளறு வளாகமது சித்தி எனும் ஓரிடத்துக் கற்பூர
தீபம் ஏற்றி ஆராதித்து ஆனந்த மேலீட்டு
இனிய கூத்தாடி நின்று
பருவுடல் மறைத்து வெளியான அரசே வருக
வருக நல்லரிய சித்தி வண்மையருள் திரு
வருட்பிரகாச வள்ளலே வருக என்மணி வருகவே

(ஓர் அன்பர்)

தாய்மலர்ந்த பெருங்கணைத் தத்துவனார் எங்கள்
சனிப்பிறப்பை ஒறுத்து வினைத் தனித்தொடக்கை அறுக்க
வேய் மலர்ந்த கருணைதிருமேனி கொண்ட காலத்து
எண்தோளோ இருதோளோ முக்கண்ணோ இருமை
ஆய்மலர்ந்த அருட்கண்ணோ நாமம் எழுத்தைந்தோ அன்றி
அருள் இராமலிங்க அற்புதப் பொற்பெயரோ
வாய் மலர்ந்தது ஈரிரண்டு முறையோ மூவிரண்டு மா
முறையோ வகுத்துரையீர் மயக்கொழி மாதவரே

அகத்தியனோ வான்மீகியோ ஆதிசேடன்தானோ
மகத்துவமாம் சம்பந்த வள்ளலோ - இகத்தில்
சச்சிதானந்தத்தின் தண்ணளியோ என்னென்பேன்
மெச்சுமதி இராமலிங்க வேள்.

(பொன்னேரி **சுந்தரம்பிள்ளை**)

மாநில வரைப்பில் பிறவி பற்பலவாம் மற்றவற்றரிது மானுடம் என்று
ஈனுலகு உரைக்கும் அதில் உயிர்க்குறுதி எய்துதல் அரிது என்பர் எனையும்
தானொரு பொருளா யெடுத்து இனிதாண்டு தரை மிசைச் சுத்த சன்மார்க்க
மேனிலை வைத்த சற்குரு மணியின் வியனிலை உரைத்திடல் அரிதே
(பெங்களூர் இராகவலு நாயக்கர்)

பவக்கடல் கடந்து கரைபெறாது உழலும் பாவி என்தனை அதில்சேர்க்கத்
தவக்கடல் அனையார் புகழ்தரும் தனதாட்சார்பு தந்து அருளுதற்பொருட்டே
அவக்கடல் கடத்தி அருள் வடலூரில் அமர்குரு ராமலிங்கப் பேர்
எவக்கடல் கடந்தும் எங்குருராயனிறு சரண் என்றும் வாழ்த்திடுவாம்
(திரிசிரபுரம் ம. லோகநாத செட்டியார்)

பக்திக்கடலே சிவஞான பதியே என் நற்பாக்கியமே
முக்திக் கரசே இராமலிங்க முனியே மோன முழுப் பொருளே
பித்திற்கிடந்தே அறிவழிந்த பேயேன் உன்தாள் பெறல்என்றோ
சித்தி வளாகத் திருமடத்தில் திகழும் தெய்வத் திருவிளக்கே

பீடார் திருவருட்பாவாணர் வந்திப் பெருநிலத்தில்
பாடாத பாட்டையும் பாடிடுவார் எனப் பாமடந்தை
ஏடார் கமலத்து இராது அயன்நாவினில் இருக்கலுற்றாள்
ஓடா வனந்தனும் பாதலம்புக்கு அங்கு ஒளித்தனனே

ஊர் பாடுவார் சிலர் ஓயாமல் செல்வம் உதவி செய்வோர்
பேர் பாடுவார் சிலர் பிரியாவிடை எனும் பெண்கள் குணச்
சீர் பாடுவார் சிலர் ஸ்ரீராமலிங்க நற்றேசிகர்போல்
ஆர் பாடுவார் கேட்டபோதே புலன்கள் அடங்கிடவே



வாராத வல்வினை நோய் வந்தாலும் வன்மையொடு
சேராத பாவமெல்லாம் சேர்ந்தாலும் - தீராதென்று
ஆர் சொன்னார் எங்கள் அருட்பிரகாசப் பெருமான்
பேர் சொன்னால் போமே பிணி
(கூடலூர் சிவ துரைசாமி தேசிகர்)

தேரூர்ந்து மேருவலம் செய்தொளிரும்
செங்கதிர்போல் திகழ்ந்து நாளும்
நீரூர்ந்த கடல் உலகிற்கு அருட்கிரணம்
தனைப்பரப்பி நெடிய மூலம்
காரூர்ந்த குப்பாயம் கிழிய அருட்
பெருஞ்ஜோதி காணக்காட்டும்
தாரூர்ந்த வயங்கெழு தோள் இராமலிங்க
குரு வடலூர் சபை கண்டோனே

கண்டாய் நீ வடலுறு சிற்சபையில் அருட்
பெருஞ்ஜோதி கண்டபின்னே
கொண்டாய் நீள்மோன பதம் கல்லாலின்
புடையமர்ந்தோன் கோலம் பூண்டாய்
தண்டாய் நீங்காத தொழும்பருடன் நின்றாய்
எனையுனடித்தண்டேன் மாந்தும்
வண்டார் நீர்மையனாகப் பணித்தி அருட்
பிரகாச வள்ளியோனே

வள்ளலாய் வடலூருள் வருவார்க்குன்
அருளமுதம் வழங்கா நின்றாய்
கொள்ளலாம் பரிபாகம் இன்மையினால்
பரிந்தேத்திக் கொளமாட்டாமல்

எள்ளலா மலத்தழுந்தி மாழாந்தேன்
எனக்கும் எந்தாய் இரங்குவாயோ
கொள்ளலாம் மலவுடல் பொன்னுடலாக்கும்
இராமலிங்கப் புனிதத் தேவே

தேவே மெய்ஞ்ஞான அருட்பிரகாச
வள்ளல் எனத் திகழா நிற்கும்
கோவே எண் குண மலையே வடலுறு சிற்
றம்பலத்துட் குலவுஞானப்
பூவே அப்பூமணமே மணங்கமழ்செந்
தேனே நின்பூந்தாட்கென் சொற்
பாவேறத் தொண்டு கொண்டாய் முன் எதுமா
தவம் புரிந்தேன் பதகனேனே.
(மஹாவித்வான் சித்தாந்த ரத்னாகரம் அரன்வாயல்
வெங்கடசுப்புப்பிள்ளை)

சீர்பூத்த மறைமுனிவர் அகம்பூத்த நலம் பூத்திறத்தினான் இப்
பார்பூத்த மயல் பூத்த எனதுளத்தில் பூத்த நசைபாறப் பூத்த
ஏர்பூத்த அருள் நயன இணைபூத்த இருந்தவன் இங்கு இறைமை பூத்த
பேர் பூத்த போத சிதம்பர இராமலிங்கன் அடிபேணி வாழ்வாம்.
(சென்னை சூளை சோமசுந்தர நாயக்கர்)

அருள்பழுத்த செழுங்கனியே அகம் பழுத்த
சிவஞான அமுதே முத்திப்
பொருள் பழுத்த அருட்பாவை எமக்களித்த
தெய்வ மணப் பூவே என்றும்
மருள் பழுத்த அடியேங்கள் மனஇருளை
அகற்ற வரும் மணியே மெய்மைத்
தெருள் பழுத்த வடலூர் வாழ் இராமலிங்க
நின்னருளைச் சிந்திப்பேனே.
(காவேரிப்பாக்கம். ரா. நமச்சிவாய முதலியார்)



எத்தனை பிறவிகள் எடுக்க வைத்தும் பிரமன் இன்னும் சலிக்கவில்லை
இறப்புத் தொழில் பலவிசைத்தும் அவ்வியமனுக்கென்பால் இரக்கமில்லை
நித்தமும் விடாது அனுபவிக்க வரும் முன் செய்த நீள்வினை ஒழிந்ததில்லை
நெஞ்சம் எண்பது கோடி நிதம் நினைக்கும் தொழிலை நிமிடமும் மறக்கவில்லை
சித்தமொடு புத்தியும் சிந்தனை விசாரணை சிறிதும் குறைந்ததில்லை
சிறியனேன் என் செய்வேன் இவ்வகைத் துன்பெலாம் தீர்ந்திடச் செய்தருளுவாய்
சித்தர் முத்தர்கள் பத்தர் நற்றவர் பெரும்புலவர் சேர்வடற் சிற்சபையில் வாழ்
திருவருட் புரவாச மருவும் உத்தமர் நேச திருவருட் பிரகாசனே!

ஞாலமதின் மனமொத்த நண்பினரை வஞ்சிக்கு நயமுளேன் நல்லோர் தமை
நாத்தமும் பேற வன்மொழி நவிலுவேன் உன் தன் நாமம் ஒருபோதும் உரையேன்
சால மடவார்தமைத் தஞ்சம் என எண்ணுவேன் தவ விருத தரும நினையேன்
தானஞ் செய்வோரைத் தடுக்க அறிவேன் தீயார் தம்மினும் தவறு புரிவேன்
காலமெல் கயமை பல கருதினேன் எனினும் இக் கடையேனை ஆண்டருளுவாய்
சீலமிகு மெய்யடியார் சேரும் வடலூரெனும் சித்திபுர சிற் சபையில் வாழ்
திருவருட் புரவாச மருவும் உத்தமர் நேச திருவருட் பிரகாசனே!
(காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளை)

இராமலிங்கச் சுடரேற்றுபு நோய் செய்என் தொன்மை பல
இராமலிங் கண்ணிய புன்மை உளம்விளக் கூவிடும்பை
இராமலிங்கன் எடுத்துட் படுத்தாண்ட எழிற்கருணை
இராமலிங்கக் குரு ராயன் நற் பொன்னடி என் முடியே.

வாய் மணக்குறை மனமெலாம் மணக்க வையம் வானகம்
மற்றுள மணக்கத்
தூய் மணத்த மாமறை முடி மணக்கத் தூய ஆகமத் தொல்சிர
மணக்கத்
தாய் மணக்குறுங் கருணையினால் என் தலை மணக்குறத்
தரித்த பூங்கழல்கள்
ஏய் மணத்த சண்முக சிவகுருவோம் இராமலிங்கவோம் சிவாய
சற்குருவோம்.

பழுத்த மெய்யன்பின் சுவை முழுதுண்ட பாதவோம் பசுபதி சிவசிவவோம்
முழுத்த மூடனேன் உளங் குடிகொண்ட மூர்த்தியோம் அருள்
தீர்த்தவோம் சிவவோம்
விழுத்தகும்திருத் தில்லை அம்பலத்து வேதியோம் முத்தி வித்தக அன்பு
வழுத் தவோம் அரகர சிவவோம் அருட்பிரகாச வோம் ஜெய ஜெய ஜே ஜே
என்னும் எண்ணங்கள் எண்ணிய வண்ணம் இனிதுணர்ந்து
ஏழையோங்களுக்கருளும்
வண்ணவோம் அருள் வண்ண செவ்வண்ணமாய் வந்தகப்பட்ட
மாழகன் முடியாப்
பண்ண நல்லருள் பண்ணிய எங்கள் பண்ணவ பழமறை முழுதேத்தும்
அண்ணலோம் அரகர சிவவோம் அருட்பிரகாசவோம் ஜெய ஜெய ஜே ஜே

சோம சிங்கார நம தூய சந்தோட நம
சூழுறும் வேதமுடி சூடரும் பாத நம
காம சங்கார நம காதலன் பாருமவர்
காதலின் காறுமமர் காசினன் பாத நம
நாமம் அங்கோதினர்கள் நாச மின்றாகியுப
நாடரும் வீடுதரும் ஞான செம்பாத நம
ராமி பங்காள நம நானுயும் வாறு வரு
இராமலிங்காயநம இராமலிங்காய நம



பாராபரம் கோதகலும் அநாமயம் போத நிலை
பாகநலம் வாதமறு சகோதயம் பாதிதமில்
நிராமயம் காரக மிதிலாத சஞ்சீவித நல்
நிராசை கொண்டாருடைய நிகேதனம் சூத முறல்
வராத இன்பார வெனை முநாளில் வந்தேயருளி
மகாபலம் சேர அருள் விராவு செம் பாத நம
இராமலிந்தார் மனதின் இராத சந்தோட நம
இராமலிங்காய நம இராமலிங்காய நம

சாம சண்டாய சரணம் சாது சந்தான சரணம்
தாவில் அன்பாகுமவர்தம் சார்பினின்றாடி சரணம்
காம கண்டாய சரணம் கால சண்டாய சரணம்
காளகண்டாய சரணம் காளி கண்டாய சரணம்

வாம சிங்காரி மகிழும் தாம மந்தார சரணம்
மாம சங்கார சரணம் மீம சஞ்சார சரணம்
நாம மந்த்ரேச சரணம் ராமலிங்கேச சரணம்
ஞான பண்டீத சரணம் நாத முண்டீச சரணம்

ஞான பண்டீத சரணம் நாகர்தம்வாழ்வு சரணம்
நாதம் விந்தோடு கலை என்னாடகன்றாடி சரணம்
மோன சிந்தாதி சரணம் மூவலின்றாதி சரணம்
மோனி சிந்தாய சரணம் மூதகண்டாய சரணம்

வானசிந்தாய சரணம் மாகதம்பாய சரணம்
மாயுரம் வீர சரணம் வாலை தன்பால சரணம்
தீன பந்தாதி சரணம் சேவலந்தோகை உயரும்
சீர செந்தூர சரணம் தேவ நந்தேவ சரணம்

சிந்தாமணியே சரணம் சரணம் திருவே மருவே சரணம் சரணம்
கந்தா கனியே சரணம் சரணம் கதியே மதியே சரணம் சரணம்
எந்தாய் இறையே சரணம் சரணம் இனியாய் தனியாய் சரணம் சரணம்
முந்தா முறையே சரணம் சரணம் முனியே கனியே சரணம் சரணம்

விசித்ர விஸ்வமாயினம் விகாரம் ருத்யு பஞ்சனம்
சரீர ரூப வர்ஜிதம் - ஸ்வயம் பிரகாச லக்ஷணம்
தநுத்ரயேன சோபிதம் - தராதி தத்வ தாரிணம்
குருத்தமார்ய ராமலிங்க-கோமணிம் நமாம் யஹம்

சிதாத்ம தேஜ பாஸ்வரம்-சிவானு பூதி ரஞ்ஜனம்
ஸதாத்ம கோடி நாயகம்-–டாந்த ஜ்யோதி பாஸ்கரம்
பதார்த்த ஸோத நாஸ்ரயம் - பவாப்தி சோ–ணாகரம்
குரூர்த்த மார்ய இராமலிங்க - கோமணிம் நமாம் யஹம்

சாரா சராத்ய ரூபகம்-சதோதயார்க்க சிந்திதம்
க்ஷரா க்ஷரத்வ கயாதிகம் - ஸநாதனம் புராதனம்
பராபரப்ரகாசகம் - பரோக்ஷ போத வர்ஜிதம்
குரூர்த்த மார்ய இராமலிங்க - கோமணிம் நாமம் யஹம்

கரைத்தெனானான மூர்ச்சை கருத்தினா தேச நீத்து
கணிப்பில்லாசாசை வாட்டிலிருந்து பதாய போற்றி
உரைத்த நாவாலுமாட்டாப் பெருத்த வானாதி போற்றி
ஒருத்தனாயாது மாக்காதிருத்த சீபாத போற்றி
இரைத்த மாவாரி தீர்த்தம் இருக்கு மோடீர போற்றி
இசைக்கு மாவேத வாக்கு விரித்த தாளாளா போற்றி
நிரைத்தமா யாசகார்த்த நிறுத்த கோலாய போற்றி
நிருத்தரா சாயபோற்றி நிருத்த பாதாய போற்றி



உலகினில் எவரும் அலகிலா இரும்பூதுறப் பற்பல அற்புதங் காட்டி
நிலவுறீஇ ஒளிரு மறைமுடி வாழ்க்கை நீத்தெமை ஆளுதற் பொருட்டு
குலவு மாநிலத்தில் மானிட உருக்கொள் குருமணி இராமலிங்கப்பேர்
இலகு சன்மார்க்கத் திறையடி என்றன் இதயத்தில் என்றும் வாழியவே

சேலறா வயல்சூழ் உத்தரஞான சித்திபுரத் தனிவாழ்க்கை
சாலறாச் சுத்த சமரச ஞான தயாநிதி அடியனே னுளத்தின்
பாலறா தோங்கும் இராமலிங்கப் பேரிப் பகரருங்குரு சிகாமணி தன்
வாலறாப் பாதயுகளத்தாமரை என்மனத் தடமலர்ந்து வாழியவே

வாழி வடற்சிற்சபையில் வாய்ந்த நடராஜர் அருள்
வாழி அவண் பூசிக்கும் மாதவர்கள் - வாழி என்றும்
வள்ளல் இராமலிங்க மன் அடியார்கள் எல்லாம்
புள்ளலிலா இன்பம் இயைந்தே.

(கூடலூர் சிவ. துரைசாமி தேசிகர்)

பக்தி வரும் பழவினைகள் பறந்தோடும் மூல மலப் பகுதிமாயும்
புத்தி வரும் புலைகொலைகள் புறம்போகும் ஆனந்தம் பொங்கும் சாந்த
முத்தி வரும் அழியா நன்மோக்கமுறும் முதுகடல்சூழ் உலகில் எல்லாச்
சித்தி வரும் இராமலிங்க தேசிகன்தன் அருட்பாவை சிந்திப்போர்க்கே

மைக்காலன்தனை உதைத்து மறையவனுக் கருள் புரிந்த வள்ளல்மீதே
அக்காலம் பெரியரெல்லாம் அரிய நறுந் தமிழுரைத்தாரதனை ஓர்ந்தே
இக்காலம் தெளி நடை யால் அருட்பா என்றொரு நூலை இயம்ப உன்னை
முக்காலம் அறிந்த பிரான் ஏவினனோ இராமலிங்க முனிவரேறே

புலைமறந்த புண்ணியர்கள் புகழுகின்ற இராமலிங்கப் புனித நீதான்
கலைமறந்த அனுபவத்தால் கனிந்துரைத்த அருட்பாவைக் கழறுந்தோறும்

மூலைமறந்து குழவிகள் கொன்முக நோக்கும் விலங்கினங்கள்
முற்றும் பொல்லாக்
கொலைமறந்து செவியேற்று இங்கு அருள்மயமாய் விளங்கும்
எனிற் கூறலென்னே

அண்டமெல்லாங் கடைந்தெடுத்த அமுதமென்கோ ஐங்கரனார்க்கு
அரனாரீந்த
மண்டு சுவைக் கனி என்கோ வள்ளி முனம் வேட்களித்த மலைத்தேன்
என்கோ
கண்டவர்கள் அதிசயிக்கக் கவி பொழியும் இராமலிங்கக் கடவுள் ஞானி
தண்டமிழாலுரைத்த திருவருட்பாவின் சுவையதனைச் சாற்றுங்காலே

காவென்றால் கற்பகமே கனி என்றால் கதலியதே கண்ணிற்
காணும்
தேவேன்றால் தினகரனே திருஎன்றால் அருள்திருவே செய்யாள் வாழும்
பூவென்றால் தாமரையே புலமென்றால் மெய்யறிவே பொருந்துமேலாம்
பா வென்றால் அருட்பாவே பதி என்றால் பசுபதியே பகருங்காலே

பனியினிக்கும் மொழி ராமலிங்க அருட் பண்ணவனே பண்பான் மிக்க
தனியினிக்கும் மணமுடையார் சந்ததமும் பரவு பெருந்தகையே நீதான்
நனியினிக்கும்படி உரைத்த நல்லருட்பாச் சுவையதனை நாடாரெல்லாம்
கனியினிக்கும் கரும்பினிக்கும் கண்டினிக்கும் என்றென்றே கழறுவாரே

செழுத்த மலர்க் குழலுமையாள் சிவகாமவல்லியொடு
திருமன்றாடும்
முழுத்தலைமைத் தனிக் கடவுள் முளரிமலர்ப் பதமதனில்
முயன்று நாளும்
அழுத்தமுறும் இராமலிங்க அண்ணால் நீ வாய்மலர்ந்த
அருட்பா தன்னில்



எழுத்தெழுத்தும் இனிக்கும் என்றால் என் சொல் கேன் நின்
கீர்த்தி என் சொல்கேனே

ஒரு தரம் படிக்கில் உடற்பொறி கரணம் ஓய்ந்து உயிரனுபவம் கூடும்
இருதரம் படிக்கில் எண்ணிலாச் சித்தி ஏய்ந்து அருளனுபவம் கூடும்
மறுதரம் அதையே முத்தரம் படிக்கில் மண்ணிறை அனுபவங்கூடும்
கருதரும் வள்ளல் கனிவுடனுரைத்த கவினருட்பாவிலோர் கவியே

வாணியும் சோமியும் வானத்தின் மேவி வயங்கும் இந்தி
ராணியும் போற்றர சிதாம்பரத்தில் ரமிப்பவன் தாட்
பேணியும் வந்திடும் இராமலிங்கேந்திரர் பேசிய நூல்
ஏணியும் ஆகுமன்றோ முத்தி வீட்டினில் ஏறுதற்கே

தக்கனைச் செற்றவர்கே தகரின்றலை தந்தவந்த
நக்கனைப் பாடிய நாவருள்ளம் நயந்திடவே
கற்கரையும்படி ராமலிங்கேசர் கரைத்த தமிழ்
சற்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்திட்ட தன்மையதே

அருட்பா எனாது மருட்பா எனச்சொல்லி ஆணவத்தால்
இருட்பா டுலகினில் ஏரேயென வுழலீனர் கட்கே
பொருட்பா லளிப்பவர்கட்கும் நரகம் பொருந்துமென்றால்
தெருட்பாவிகள் படும் பாட்டையும் கேட்டையும் செப்பவற்றோ

அருவருப்பாகிய நோயனுகார் அந்தகாரமெனும்
ஒருபெரும் பாழ் நிரையம் புக்கிடார் உலகேத்த நிற்பார்
தெரு அருட் சித்தரெனும் இராமலிங்க நற் நேசிகர் சொல்
திரு அருட்பாவில் ஒரு கவியேனும் தெரிந்தவரே

தற்போதந் தலைக்கொண்டு தனையறியாச் சுந்தத்தால் தருக்கிப் பேசும்
துற்போதச் சுணங்கரொடு சேராமல் நெஞ்சே நீ சுக மெய்ஞ் ஞானச்
சிற்போதச் சோதி தனைக் காட்டு திறல் இராமலிங்க தேசிகேந்த்ரன்
சொற்போத அருட்பாவைத் தொழுததனுட் சுவையருந்தி சுகித்திடாயே

அருட்பிரகாசர் அருட்பெருஞ்சித்தர் அருட்பெருஞ்சோதியார் மீது
தெருட்பிரகாசத் திருவருட்பாவாம் தீபமொன்று ஏத்தினரதுதான்
இருட்பிரகாசம் தொலைந்து எழுநிலை மேலேற்றி எட்டா நிலையாமப்
பொருட்பிரகாசம் தம்மொடு பொருந்திப் புலையிலாப் போக மீய்ந்திடுமே

சினத்தை அவித்த சித்தரெல்லாம் செப்பும் இராமலிங்க மெனும்
கனத்த யோக தற்பர நின் கனிவாய் மலர்ந்த வாசகந்தான்
தனத்தினடத்தும் தனமுடையார் தங்களிடத்தும் தாவுகின்ற
மனத்தை ஒழித்து இங்கு அன்பை ஒரு மலை போல் வளரச் செய்திடுமே

தேன் கலந்த திருவமுதாம் தேவாரத் திருப்பாட்டைத் தினமு நாடி
நான் கலந்து பாடுங்கால் நானறியேன் ஏனை என நீ நவின்ற பாட்டை
வான் கலந்த வடலூர் வாழ் இராமலிங்க மணியே யான் வழுவதுங் காலை
ஊன் கலந்த உயிரெல்லாம் உளமெல்லாம் உணர்வெல்லாம் உருகுமாலோ

வள்ளல் நின் வாசகத்தை வடித்த தமிழ்த் தேனென்கோ வானோர் எய்து
அள்ளாத அமுதென்கோ அருள் என்கோ அன்பென்கோ அறமே என்கோ
பொள்ளாத மணியென்கோ பொருளென்கோ பொன்னென்கோ புலன்கள் நாடி
விள்ளாத வீடென்கோ இராமலிங்க மாமணியே விரிக் கொணாதே.

(காவேரிப்பாக்கம் கா. நமச்சிவாய முதலியார்)



# வள்ளற்பெருமான் பிள்ளைத்தமிழ்

நூல் ஆக்கம்

புலவர் **மா. க. காமாட்சிநாதன்**

## வள்ளலார் பாடற் சிறப்பு

நெய்விளக்கென நீர்நின் றெரியுமே
　　　　நீளிராவில் ஒளியுந் தெரியுமே
கைவிளக்கென நின்றுகண் ணாடியில்
　　　　கந்தனாருருக் காட்டிக் கொடுக்குமே
ஐவிளக்கு மரணந் தவிர்க்குமே
　　　　அலகைநோயை அலறத் துரத்துமே
வைவிளக்க வழியது காட்டுமே
　　　　வள்ளலாரருள் வண்டமிழ்ப் பாடலே.

மா.க.காமாட்சிநாதன்

1. வை = வையம் - உலகம்



உ

## செங்கீரைப் பருவம்

1. முழுமதி புரை தரு திருமுக மண்டில
　　　　முன்றிற் சுற்றுசடை
முயலுறு கறையினை மானப் புன்னகை
　　　　முகிழ்செங் கனிவாயின்
எழுதொறும் உமிழ்நில நினிலரு குறுமிருள்
　　　　எங்குமி ரிந்தோட
இன்பச் சிவஞா னத்தேன் ஒழுகுவ
　　　　தெனவாய்க் கடையூறல்
பொழியப் பரமா னந்தக் கடலில்
　　　　பொற்புற மூழ்குதலைப்
போலுடல் வளைய இனிப்பிற வாவிப்
　　　　புவிகடை முறை நோக்கி
அழிவற உயிர்கட் கெளிவரு கருணையன்
　　　　ஆடுக செங்கீரை
அன்புத தும்பிவ ழிந்திடு பாவலன்
　　　　ஆடுக செங்கீரை.

| | | |
|---|---|---|
| புரை தரு | = | ஒப்பான |
| மான | = | ஒப்பாக |

2. நன்றிய தில்லா நவையுடை யுலகர்
நட்பினை யுள்ளாமே
நகையொளிர் முத்தம் பொன்மணி பொருள்மேல்
நசையது கொள்ளாமே
குன்றையெ றிந்து கொன்றவன் அடியைக்
கூடிப் பிரியாமே
குலவுத மிழ்க்கவி கூறும் இலக்கணக்
கோடது கோடாமே
கொன்றை அணிந்து நின்றதோர் குன்றக்
குவடது வெம்பாமே
கொண்டலெழுந்து கொட்டுவ தென்னக்
கொட்டும் அருட்கவியே!
அன்றொடு மின்றும் என்றும் இருப்பவன்
ஆடுக செங்கீரை
அருள்வட லரசே பொருள் தரு மணியே
ஆடுக செங்கீரை.

கோடது கோடாமே = வாம்பு கடவாமல்

நசை = விருப்பம்.



3. சங்கமி ருந்துவ ளர்ந்தத மிழ்க்கவி
தருமுயர் இன்பமெலாம்
சாரநி னைந்திடில் வாருமி தோவெனத்
தழுவியு ரைப்பதுபோல்
இங்கித மாலை என்றொரு நூலையி
யற்றிஅ தன்கண்ணே
இலகும் கச்சுவை பொதுளநி றைத்துடன்
இறைநல மதுதுள்ள
தங்குமி ரண்டிரு கேள்விக ளுக்குந்
தகுமொரு சொல்லில்இறை
தரவுரை வல்லவன் கரவுரை யில்லவன்
தடைநட வாதென்றோன்
அங்கொடு மிங்கும் எங்கும் இருப்பவன்
ஆடுக செங்கீரை
அருள்வட லரசே பொருள் தரு மணியே
ஆடுக செங்கீரை.

இறைநலம் = பேரின்பம்

இரண்டிரு கேள்வி = நான்கு கேள்வி

இறைதா = விடை கொடுக்க

கரவுரை இல்லவன் = வஞ்சனைப் பேச்சு இல்லாதவன்

4. தூய்மைமி குந்திடு மேன்மைபொ ருந்திய
தொல்காப் பியநூலின்
சொன்மர புக்கொரு தன்மையி லக்கது
தோன்றிடு மாப்போல,
சேய்மைக டந்தவர் நோய்மையொ ழிந்தவர்
சேடார் வளமென்றே
திகழவெ டுத்தொரு கோடா கோடி
திருவளர் தாமரையாம்
தாய்மையு வந்திடு தாமரை நூறொரு
சங்கம் தாயிடுமாம்
தாதா தாமுத் தாவெனின் மூன்று
தந்ததி முத்தியதாம்
ஆய்கவிவ் வாய்மையை என்றுபு கன்றவன்
ஆடுக செங்கீரை
அருள்வட லரசே பொருள்தரு மணியே
ஆடுக செங்கீரை.

சேய்மை = தூரம், பிள்ளைமை

நோய்மை = பிணி

5. தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
செய்ததி ருக்குறளில்
திகழ்துற வுக்கரு ளுடைமையை முதலார்
செய்துதொ டுத்தனரால்
உய்வைத் தருமத் துறவுக் குயிலாம்
உயர்பே ரிரக்கமதே



உடலுயி ராதிய னைத்தும் எனக்கொண்
டுலவிடு திருவுருநீ
மெய்மைத் தகுறட் கிலக்கியம் நீயெனல்
மிகைபடு சொல்லன்றே
மேலுற நோய்பவர் காலனு தைப்பது
மெய்யெனல் பொய்யலவென்
றைவைத் திடுவெம் மரணமொ ழித்தவன்
ஆடுக செங்கீரை
அருள்வட லரசே பொருள் தரு மணியே
ஆடுக செங்கீரை.

6. பகுதி தகுதி விகுதியெ னும்வாய்
பாடொரு மூன்றினிலே
பகுதிப சித்திரு தகுதித் தனித்திரு
விகுதிவி ழித்திருவாம்
இகலற நடுவிலி ருக்குங் குவ்வை
இரட்டித் தறுகாக்கி
ஈசற் கணியிற் பதவியும் முத்தியும்
எய்துவ தாமெனவும்
தகுதிமி குத்திடு தாவேழ் எழுதித்
தலையிலெ முத்தெனவும்
தாதா வென்பது வள்ளல டுக்குத்
தருமிரு பொருளெனவும்
அகவுட னுரை தரு போதன சைந்திங்
காடுக செங்கீரை
அருள்வட லரசே பொருள் தரு மணியே
ஆடுக செங்கீரை.

## வேறு

7. எவ்வுயிரும் பொதுவென்றும் பொதுவென்ப
திறைதங்கும் இடமா மென்றும்
எண்ணியறிந் தவ்வுயிர்கள் இதம்பெறவே
நலம்புரிவார் எவரோ அந்தச்
செவ்வியரே நாம்வணங்குந் தெய்வமவர்
செய்பணியே சிறந்த தென்றும்
திரை கடல்சூழ் வையமெனத் தேவருறை
வானமெனச் செப்பா நின்ற
அவ்வியலாம் பலகோடி அண்டமெலாம்
இறைவர்திரு வடியி லுற்ற
அணுத்துகளென் றகெனவும் அறிவித்த
பெருங்கருணை அமுதே ஞானத்
திவ்வியமா முனிவர்தொழுந் திருவருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
சிதம்பரந் திருராம லிங்கநற்றேசிக
செங்கீரை யாடியருளே.

8. ஒருமைமன தாகியே வழிபா டியற்றுவோர்
உத்தமர்க ளாவரவர்தம்
உறவுகொளல் வேண்டுமஃ தல்லாத பேர்களுற
வுறுதலே கூடாதென
அருமைபெறு பெரியார்த் துணைக்கொள்க
சிற்றினம்
அஞ்சுதல் செய்கவென்றே



அரியமறை வாய்மையை எளியமுறை யாகயாம்
அறியத் தெரித்தலுடனே
மருவுதல் தொழிலெனும் வரைவிலா மகளிர்தோள்
மருவவிழை யாமைவேண்டும்
மனமுடல் பிணியற்று மதிநலம் பெற்றருள்
மன்னிடப் பெறுகவென்றோய்!
திருவுமிகு மொற்றிவரு திருவருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
சிதம்பரந் திருராம லிங்கநற் றேசிக
செங்கீரை யாடியருளே.

9. திருவளரு மருதூரில் இராமையா பிள்ளையவர்
செய்திருப் பணியினாலும்
செந்தமிழ் நாடுமெஞ் சின்னம்மை யார்செய்த
தெய்வநன் நோன்பினாலும்
உருவளரும் உலகுயிர்கள் ஆற்றுந்த வத்தாலும்
ஊனுடம் பேந்திவந்தே
ஒளியுடம் பாக்கியிவ் வுலகெலாம் உய்ந்திட
உயர்வழியெ லாம் உரைத்தாய்
கருவளரும் வழியொழிய எண்ணிமனம்
நையுமவர்
கண்ணினீர் தன்னின் மூழ்கிக்
கருணையொடு தோன்றிநின் றஞ்சிடே
லென்றுகை
காட்டுங் கருணை வடிவே.

தெருவளருஞ் சென்னைசேர் திருவருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
சிதம்பரந் திருராம லிங்கநற் றேசிக
செங்கீரை யாடியருளே.

10. மகமெலாஞ் செய்யினும் மாதிரஞ் சுற்றினும்

மாகமே போய்மீள் கினும்
மாநிலந் தன்னில்வரு மக்களை மாற்றுமோர்
வல்லமை காட்டினாலும்
அகமெலாம் நெக்குநெக் குருகியரு ளேத்திடும்
அன்பிலா துயிருடம்பை
அறுத்துப் புசிக்குங் கருதுடைய னாவனேல்
அவன்ஞானி யாகானென!
உகமெலாம் நின்றிடத் திருவருட் பாவெனும்
ஒண்மறை தீட்டியதனுள்
ஒருநூறு குறையநா லாயிரம் முறை[2]யருள்
ஒலித்திடச் செய்தபெரியோய்
செகமெலாம் போற்றிடுந் திருவருட் பிரகாச
செங்கீரை யாடியருளே
சிதம்பரந் திருராம லிங்கநற் றேசிக
செங்கீரை யாடியருளே.

| | | |
|---|---|---|
| மகம் | = | யாகம், |
| மாதிரம் | = | திசை |
| மாகம் | = | வானம் |



1. மருவாணைப் பெண்ணாக்கி... என்று தொடங்கும் அருட்பாவைக் காண்க.

2. அருள் என்னுஞ்சொல் திருவருட்பாவில் 3900 முறை வந்துள்ளது.

## தாலப் பருவம்

1. உலகம் அளந்தோன் காண்பரிய
ஒருவன் இருதாள் மலரையணு
வுள்ளஞ் செறித்த அருட்கடலே
ஓதா துணர்ந்த கலாநிதியே
பலரும் புகழும் வடமொழியில்
பாரித் துளநான் மறையணுவாய்ப்
பண்ணார் சுவைத்தீந் தமிழ்மறையே
பைம்பொற் குன்றாம் எனினும் ஒவ்வா
நிலையிற் றெனவா ரூர்நம்பி
நிமலற் பாடி முதலையின்வாய்
நின்று மதலை வரவழைத்த
நீர்மை வியக்கும் தமிழ்த்தவமே
கலவ மயில்வா கனத்தணிகைக்
கடவுட் கன்பா தாலேலோ
கணக்கை யறிந்தும் விடேனென்னுங்
காளாய் தாலே தாலேலோ.

## வேறு

2. சின்மய தீபிகை ஒழிவி லொடுக்கம்
   திருமந்திர முறையும்
திருவா சகமுந் தேவா ரம்மொடு
   திகழ்தர நின் றருளும்
நன்னய நூல்கள் அனைத்தும் உணர்ந்திடு
   நாவலர் பெருமானே
நஞ்சென நெஞ்சை ஒறுத்து மடக்கிய
   நல்லவர் மருமானே
என்மய மென்பதும் நின்மய மென்பதும்
   இன்றியி ருந்திடென
என்னுளி ருந்துநல் இன்னருள் செய்திடும்
   என்னுயிர் நாயகனே!
தன்மய மற்றிடு நன்மய முற்றவ!
   தாலே தாலேலோ
சமரச சத்திய சங்கத் தலைவா!
   தாலே தாலேலோ.

3. நித்திய உலகியல் என்னுமொ முக்கொடு
   நியமம் பலசொல்லி
நினைந்து நினைந்தழு துருகிநெ கிழ்வது
   நின்வழி யென்றுபுகன்
றெத்திசை யும்நிறை சித்தரு வந்திட
   இறவா வழி கூறி



இருந்து கனிந்துநி னைந்தவர் தம்மொ
   டிருந்துந லம்பாடி
இத்தினம் இவ்வுயிர் அத்தனை யும்நலம்
   என்போல் எய்துகென
எங்கும்நி றைந்தொளிர் கங்கைய ணிந்தவன்
   இன்மலர் அடிதொழுவோய்
சத்திய சமரச சங்கத் தலைவ
   தாலே தாலேலோ
தவமுனி வரர்தொழு சிவமுனி வரரே
   தாலே தாலேலோ.

4. கல்விய தில்லாக் கயவர்க டம்மைக்
   காணவும் ஆகாதே
கடவுளை உணராப் பேதையர் வாய்மொழி
   கற்றலும் ஆகாதே
நல்வித நூலையு ணர்ந்து மடங்கார்
   நட்பது மாகாதே
நாவைய டக்காத் தீவினை யாளரை
   நண்ணவு மாகாதே
அக்கிடு முடல்நா னென்பவர் பக்கல்
   அணுகவு மாகாதே
ஆணவ மற்றவர் தாணுவை யொப்பவர்
   அகலவு மாகாதே
மல்கிடு மாறிது வென்றுமொ ழிந்தருள்
   மன்னவ தாலேலோ

வள்ளல ருட்பிர காசநன் மணிகண்
வளருக தாலேலோ.

தாணு = கடவுள், மல்கிடும் ஆறு = பெருகும் வழி.

5. நல்வினை தீவினை யென்னுமி ரண்டொரு
நவவடி வாகியதே
நவதுளை பெறுமொரு வுடலிதை நானென
நம்புதல் தகுதியதே?
பல்வித மாயப ராபரன் உண்மை
பகிர்ந்திடு பான்மையதே?
பற்றற விட்டவர் அல்லது மற்றவர்
பார்த்திட லாகுமதே?
சொல்விதமாகிய சும்மையொ ழிந்திடல்
சுகவழி யாகுமதே
துரியவெ ளிப்பதி யுறைதரு பெரியவர்
சொன்மொழி யாகுமிதே
மல்கிடு மாறிஃ தென்றுமொ ழிந்தருள்
மன்னவ தாலேலோ
வள்ளல ருட்பிர காசநன் மணிகண்
வளருக தாலேலோ.

அம்மை = சுமை



6. முன்னர்நி னைப்பது பின்னர்வி னைப்பய
னாகமு ளைத்திடுமால்
மொழிசெய லெல்லாம் அவரவர் வினையாய்
மூண்டெதிர் நின்றிடுமால்
நன்ன ருளத்தொரு பின்னம தில்லா
நம்பனை எண்ணிடுவோர்
ஞானிக ளாமவர் ஏவலி னால்வரு
ஞாலம் நடந்திடுமால்
உன்னிடும் உயிருடல் உளவகை ஏதஃ
தொன்றுதல் எவனெனவே
உன்னியு சாவுதல் நின்னிலை தருவதொ
ருயர்வழி யாமெனவே.
தன்னிகர் தமிழ்கொடு சாற்றிடு பெரும!
தாலே தாலேலோ
சமரச சத்திய சங்கத் தலைவ
தாலே தாலேலோ.

7. நெருநளி ருந்தவர் இன்றிலை என்பது
மெய்ம்மொழி தருமறையே
நின்றவ ரின்றுட னாளையி ருப்பது
நிச்சய மின்றெனவே
தருதவ முனிவரர் ஒருரை தந்தனர்
தாயென நின்றவரே
தந்திட வுண்டிரை நொந்தென மாய்ந்தது
தருமந் திரமுறையே
வருகணம் மலவுடல் வாழ்ந்திடு மோவென
மாற்றிய துன்னுரையே

மற்றது கண்டுமென் உளமுல கியலை
மறந்திடல் செய்திலதே
சருகென வுதிர்கினு முருகிடு மனமுடை
தயவே தாலேலோ
சமரச சத்திய சங்கத் தலைவ
தாலே தாலேலோ.

8. அன்பெனும் மலையே அருளெனும் நிலையே
அறம்வளர் கடலமுதே
அறிவெனும் நிறைவே செறிவெனும் உறைவே
அறிஞர்பெ ரும்பொருளே
இன்பெனும் உருவே எழின்மிகு திருவே
என்றெனும் ஒளிர்சுடரே
இயல்வளர் தருவே உயல்தரு குருவே
எம்மவர் நல்லுறவே

வன்பறு நவமே துன்பறு தவமே
வருபவ மறு சிவமே
மயர்வறு மணியே அயர்வறு கனியே
மதியில்வ ருங்கனிவே
தன்பெரு நிலையருள் வள்ளல் பெருந்தகை!
தாலே தாலேலோ
சமரச சத்திய சங்கத் தலைவ!
தாலே தாலேலோ.

என்று = சூரியன்



9. கன்னலெ னத்தகும் இன்னமு தத்தமிழ்
கடவுள் தருந்தமிழே
கற்றிட வுற்றிட நற்றவர் பெற்றருள்
கண்டது செந்தமிழே
தென்னக மன்னவ ரன்னவ ரெல்லாந்
தேர்ந்தது பைந்தமிழே
தேடுத லற்றுயர் பாடல்வ முத்திடச்
செய்வது வண்டமிழே
முன்னிய வெல்லா மின்னிய லேதரும்
மொய்ம்புள துந்தமிழே
மூவுல குந்தொழு நாவல ருந்தொழ
மூத்தது முத்தமிழே
என்ன விரித்துரை சொன்ன தமிழ்க்கடல்
எந்தாய் தாலேலோ
எங்க ளருட்பிர காசப் பெருமலை
இறைவா தாலேலோ.

மொய்ம்பு = வலிமை

10. அஞ்சிடு மாசையை அஞ்சவ டித்திடும்
அஞ்செனும் மந்திரமே
ஆறிட வெகுளியை நூறியொ ழித்திடும்
ஆறெனும் மந்திரமே
எஞ்சிடு வினைமேல் எழுதல் அடக்கிடும்
எட்டெனும் மந்திரமே
இருளற ஒளியுற இனிமைப யந்திடும்
இம்மெனும் மந்திரமே.

தஞ்செய லற்றப ரஞ்சுடர் என்பது
தத்பத மந்திரமே
தருதுவ மாவது நீயே; ஆமெனல்
தானசி மந்திரமே.
சஞ்சல மற்றிரு வென்றுபு கன்றவ
தாலே தாலேலோ
தனையுணர் கென்றருள் வள்ளல்பெ ருந்தகை
தாலே தாலேலோ.

1. தத்துவமதி.

## சப்பாணிப் பருவம்

## வேறு

1. கரையிலா இன்பவா ரிதியிற் குளித்துயிர்
களுக்கன்பி லாதசமயக்
காடுகளை யறவழித் துச்சைவ நெறியாங்
கவின தருவ னூடுபோகிப்
பரவுவே தாகமத் தொலிமன யிரட்டுறப்
பண்ணொடன் புங்கலந்த
பாடல்சால் முத்தமிழ் மதம்பொழிந் தறுவகைப்
பகையரண் சிதைய நூறிப்
பரவெளியில் நாதயாழ் ஒலிசெவிப் படவுலாய்ப
பசுபேத மாம்பாடுப்
பகரொன் றிரண்டாம் படித்தலாச் சிவபோக
பாற்கவளம் உண்டுதேக்கித்



தருதலைவன் அடிமலர்ச் சேர்கைகொள்
சிவக்களிறு
சப்பாணி கொட்டியருளே
தன்னேரி லாவருட் பிரகாச வள்ளலே
சப்பாணி கொட்டியருளே. (வ - ந)

2. ஒன்றினொ டொன்றிரு திங்கள் கடந்திட
உறுமக வாகியபோ
துந்தையு மம்மையு முந்திந டந்துனை
ஒண்கர மேந்திடவே
அன்றவண் நின்றவர் இன்றிஃ ததிசயம்
அதிசய மென்றிடவே
அரகர சிவசிவ நமவென முனிவரர்
அகமு மலர்ந்திடவே
என்றென நின்றொளிர் மன்றினி லன்றிறை
எழின்மிகு மொளிகண்டே
இதய மலர்ந்திட முகமும லர்ந்திட
எமதிரு வினையான
குன்றற நின்றுகை கொட்டி ந கைத்தவ
கொட்டுக சப்பாணி
குலவும் அருட்பிர காசப் பெருமலை
கொட்டுக சப்பாணி.

எமது இருவினையான குன்று இற, இற = அழிய.

3. பொங்கிடு மின்பந் தங்கிடு சொல்லணி
பொருளணி கள் பலவும்
பொற்புட னிற்பநி றைந்தசெ முஞ்சொல்
பொதிந்த அருட்பாடல்
மங்கல மொழியே எங்கும் நிறைந்திட
வந்ததி ருப்பாடல்
வாக்கிது போலினி துண்டுகொ லோவென
வந்தித் திடுபாடல்
துங்க மிகுந்தவர் உள்ளுதொ றின்பந்
துள்ளுத மிழ்ப்பாடல்
சொன்னவ ருள்ளத் தின்னலொ ழித்துச்
சுகமே தருபாடல்
கொங்குல வும்பா மழைபொழி கொண்டல்!
கொட்டுக சப்பாணி
குலவும் அருட்பிர காசப் பெருமலை
கொட்டுக சப்பாணி.

கொங்கு = இனிமை, தேன், மணம்.

## வேறு

4. தண்டமி ழமர்ந்திடுஞ் சான்றோர் இருந்தவச்
சபையூ டெழுந்தஜயம்
சாமிநீ தீர்த்திடத் தக்கதென் றேத்திட,
தக்கநற் சான்றுகாட்டித்
தொண்டமண் டலமென்று கண்டவர் வியந்திடத்
தொல்காப்பியத் திருந்துந்



தோன்றுநூற் பாசொல்லி யூன்றிவைத்
தப்புலவர்
தோத்திரம் பெற்ற பெரும!
மண்டலந் தன்னிலுயர் அண்டரென நிற்பினும்
மக்களைப் பாடிடாத
மாண்புடைய மாகவி, மாதேவன் வார்கழல்கள்
மறவாத சிவயோகிநீ
தண்டையணி காலசைத் தெண்டிசை மகிழ்ந்திடச்
சப்பாணி கொட்டியருளே
சமயங் கடந்துவளர் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே

5. அம்பலவர் அருளினால் ஆகந் தரித்துவந்
தான்மாக்கள் ஈடேறிட
அகரவா காரவொலி முதலெழுத் தாறைந்தும்
அண்ணான ரறிவித்தபோல்
இம்பருல குள்ளகலை யெல்லா முணர்ந்தறிந்
தேதுமறி யாதமகனா
ஏவரு நினைத்திடத் தமையனார் சொற்பொழிவில்
ஏடுவா சிப்பவரெனா
நம்பிடந டித்துவரு நாளிலொரு நாளந்த
நல்லவையி னடுவுநின்று
நாவலர்பி ரானருண் மொழித்தேவ னார்சொன்ன
நற்றொண்டர் வரலாற்றினில்
சம்பந்தர் மாட்சியை விரித்துப் புகல்பெரும
சப்பாணி கொட்டியருளே

சமயங் கடந்துவளர் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

ஆகம் = உடம்பு, அருண்மொழித்தேவர் = சேக்கிழார்

6. சொல்லெலாம் நிறைசெழுஞ் சொல்லா
இலங்கிடத்
தோற்றுந் தொடக்கம்யாவும்
தூயநன் மங்களச் சொற்களாய் நின்றிடச்
சொல்லித் துதித்தபேர்தம்
இல்லெலாம் நிறைசெழும் பொன்னாய் விளங்கிட
எண்ணுவோ ரிதயமெல்லாம்
இறைநலங் கனியுமொரு பேரிரக் கந்தோன்ற
இருந்துசற் றேகோட்டிடில்
கல்லெலாம் உருகிடுங் கனிவது திகழ்ந்திடக்
கண்கள்நடு வூடிருந்து
கன கசபை யாடலைக் காண்மினென நல்லருட்
கவிகளாற் காட்டுவித்துச்
சல்லெலாம் மாற்றவரு வள்ளலார் பெருமநீ
சப்பாணி கொட்டியருளே
சமயங் கடந்துவளர் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

சல் = வீண்வாதம், துன்பம், பொய்.

7. புவியெலாம் போற்றிடும் பொன்னருட் பாவெனும்
பொதுமறையை எம்மறிவினால்



புக்குத் திளைத்திளைத் தாராய முற்படுதல்
பொன்மேரு கிரியினளவாய்
அவியளைந் தேற்றியுள சர்க்கரையை
யோரெறும்
பாவலொடு முற்பட்டுநின்
றளந்திடுத லொக்குமென் றறிஞர்புகல் வாரஃ
தறிந்துளோம் அஃதன்றியும்
நவில்தொறும் நூல்நயம் மிகுமென்று வள்ளுவர்
நன்மொழியு முண்டாதலால்
நாவலர் பெருமநின் சொற்படி நடப்பதே
நங்கள்கட னென்று கொண்டேம்
தவறுதல் வந்திடா தடியேமு முய்ந்திடச்
சப்பாணி கொட்டியருளே
சமயங் கடந்துவளர் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

புவி = உலகம், புக்கு = புகுந்து, அவி = நெய்

8. கானலிடை நீரெனத் தோற்றுமொரு ஞாலமிது
கண்டுள மயங்குவதுவீண்
காணென வுணர்த்துநின் பேரருட் பாவினைக்
காழ்ப்புடைய சிற்றறிவினோர்
மானமிகு பாடலிஃ தன்றருட் பாவெனும்
மாட்சியுமி தற்கொவாது
வாதமிட வருகவென நீதிமன் றத்தினில்
வழக்கிட் டிழுத்தபோழ்தில்

ஆனபெரி யோர்மனம் புண்படா வாறந்த
அவையூடு நீதோன்றியே
ஆண்டமர்ந் தோரெலாம் ஈண்டியிரு கைகுவித்
தஞ்சலித் தேத்தவாதைத்
தானமதி லேவென்ற மோனபர ஞானியே
சப்பாணி கொட்டியருளே
சமரச முணர்த்திடுஞ் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

மானம் = பெருமை, தகுதி வாதை = வழக்கினை.

9. பற்றுவது பந்தமப் பற்றறுதல் வீடிஃது
பரமவே தார்த்தமென்று
பண்பினோடு நீசொலும் பாங்கினையு
ணர்ந்துலகு
பரமசுகம் எய்தவொருநாள்
தெற்றுகட லுலகினிற் றிரிசிரா புரம்வரும்
தேசிகர் மாவித்துவான்
திருவாளர் மீனாட்சி சுந்தரம் பிள்ளைநின்
திருவருட் பாவைவாங்கி
ஒற்றியிரு கண்ணிலும் உச்சிமிசை
வைத்திதனை
யோதுவது சாலநன்றாம்
உரைசொலற் கெம்போல்வ ரெத்துணைய
ராவரென்
றுற்றுரைத் தேத்துமாறு



சற்றுமயர் வற்றுநல முற்றவுயர் நற்றவா
சப்பாணி கொட்டியருளே
சமரச முணர்த்திடுஞ் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

பற்றுவது பந்த மென்று தொடரும் - அருட்பா

10. கண்ணுதற் கடவுளாய் வந்தருள் புரிந்தசிற்
ககனவெளி தன்னை நோக்கிக்
கன்னித் தமிழ்ப்பதத் துன்னித்தி ளைத்திடுங்
கட்டழ கிருந்துகொஞ்ச
விண்ணப்ப மென்றுகலி வெண்பா
வுரைத்ததனில்
மேன்மைசால் பதிகள்யாவும்
மிக்கொளி ரியற்கையுந் தக்கதல மாட்சியும்
விரித்துப் புகன் றபுலவ!
நண்ணுதற் கரியபர வேதாந்த சித்தாந்த
நாதாந்த போதாந்தமும்
நற்கலாந் தத்தொடு யோகாந்த முந்தாண்டி
நவநிலை யடைந்தமுனிவ!
தண்ணளி மிகுத்தெமக் கண்ணித் துரைபெரும
சப்பாணி கொட்டியருளே
சமரச முணர்த்திடும் சன்மார்க்க தேசிக
சப்பாணி கொட்டியருளே.

## முத்தப் பருவம்

1. சமயப் பொருள்கள் சோபானத்தகைய
பிணக்கஞ் சற்றுமிலை
சார்ந்த வண்ணம் மாமுயிர்கள்
சார்தற்குரிய பொருளொன்றே
அமையும் உடல்சேர் சாதியின்ஆ
ணவங்கொண்டழிதல் அழகன்றால்
அறிவாம் இறைவன் உயிர்க்குயிராம்
அருள்வான் உயிர்க்கீ டாம்பயனைத்
தமையொப் பனவென் றுயிர்க்குலங்கள்
தழைக்கஅன்பால் தொண்டுசெயும்
தக்கோ ருளமே அம்பலமாத்
தலைவன் நடிப்பா னெனுமுண்மை
கமழுந் தமிழ்ப்பண் நலங்கனியும்
கனிவாய் முந்தந்தருகவே
கருணா கரனே செம்பவளக்
கனிவாய் முத்தந்தருகவே. (வ - ந)

## வேறு

2. வெளியினிற் றிகழ்தரும் மின்சார ஒளியெலாம்
மெய்யெனும் வீட்டினுள்ளே
மேவக்கொ ணர்ந்திருளை யோடத்து ரந்துலகின்
மேன்மைபெறு விஞ்ஞானியாய்;
அளியினிற் றெளிவுறும் வெளியுருக் கடவுளை
ஆன்மவறி வூடறிந்தே



அதுவிதது வென்றிடா அமைதிபெறு சிவயோக
அத்துவித மெய்ஞ்ஞானியாய்
தெளிவினிற் றெளிவுமிகு செய்யுள்பல
செய்தலால்
செந்தமிழ்க் கவியரசராய்ச்
செல்வந்த ரும்வந்து திருவடிவ ணங்கலால்
சீரோங்கு புவியரசராய்த்
தளிபெற்று நிற்பவ! செம்பவள வாயினால்
தருகமுத் தந்தருகவே
சமரச முணர்த்திடுஞ் சன்மார்க்க சங்கநற்
றலைவமுத் தந்தருகவே.

அது, இது, உது, எனப் பிரிக்க

தளி = கோயில்

3. பரமசிவம் எனுமடி பசித்திரு மற்றவர்
பசிதணித் திடுகவென்று
பகர்வதைப் பலமுறை பகரம்வர வைத்தநற்
பாங்கினால் அறியமற்றைத்
தரமிகும் எனுமடி தனித்திரு தத்துவந்
தனையுணர் கென்னுமுண்மை
தருவதைப் பன்முறை தகரம்வர வைத்துள
தன்மையால் அறியமேலும்
மரபுறும் எனுமடியில் வரும்வகர மெய்களில்
மற்றடியின் இகரமேற
மன்னும்விக ரங்களே மறவேல் விழித்திரெனும்
வாய்மையாம் மந்திரத்தைத்

தரவரும் என்பதைத் திருவடிப் புகழ்ச்சியால்
தந்தோய்முத் தந்தருகவே
சமரச முணர்த்திடுஞ் சன்மார்க்க சங்கநற்
றலைவமுத் தந்தருகவே.

### வேறு

4. உத்தர ஞான சிதம்பர மென்னும்
ஒண்டல மீதினிலே
உயர்தவ மேபுரி தவமுனி யேயிவ்
வுலகர்வி ழைந்திடுமோர்
சித்திய ளித்திடு சித்திபு ரத்துச்
சிவகும ராவுனையே
சித்தமி ருத்திய நித்தம்வ முத்திச்
செய்குதும் ஓர்துதியே
எத்திசை யும்நிறை யத்தவெ மக்குளி
ருந்தவி தந்தனையே
எண்ணிய றிந்திட நண்ணிம கிழ்ந்திட
எம்மெதி ரேவந்து
முத்தைய டுத்துள செம்பவ ளத்திகழ்ந்திட
முத்தம ளித்தருளே
முத்தமிழ் வித்தக! சித்தரு ளத்தவ!
முத்தம ளித்தருளே.

5. வாடிய பயிரைக் கண்டுளம் நொந்துரு
வாடிய அருளாளா!
வையக மெல்லா முய்யவெ முந்திவண்
வந்தருள் உருவாளா!



கூடிய வன்பர் தேடிய பொழுதில்
ஓடிய பொருளாளா!
கும்பிடும் அன்பர் தம்பிற கேநின்
றெம்பிடு திருவாளா
நாடிய யாவுங் கோடுத லின்றி
நல்கிடு குருநாதா
நாங்களு னக்கொரு பாங்கரெ னக்கொள
நல்லுள முருகாதா
மோடியல் வடலூர் ஆடிய பெருமான்
முத்தம ளித்தருளே
முத்த ருளத்தவ! சித்திபுரத்தவ
முத்தம ளித்தருளே.

6. சீர்வளம் மதியே பார்வளர் பதியே
திருவளர் பெருநிதியே
திகழ்தரு சிலையே புகழ்தரு கலையே
சித்திகள் விளைமலையே
ஆர்வளர் பெருமா னார்தரு மகவே
அமைதித ருந்தகவே
அருள்வளர் உளமே தெருள்வளர் நலமே
அன்பு மிகும் பலமே
கார்வளர் பெருமா னார்விழை மருமான்
கண்ணெதி ரேவந்து
கவலையொ ழித்தருள் அமுதம ளித்திடக்
கண்டபெ ருந்தவமே
மோர்வளர் வடலூர் ஏர்வளர் பெருமான்
முத்தம ளித்தருளே

முத்தரு ளத்தவ! சித்திபு ரத்தவ
முத்தம ளித்தருளே.

7. பொங்கிடு கதிரே பூரண நிலவே
புத்தொளி தருமணியே
புலவர்க ளெல்லாந் தலைமிசை வைத்துப்
போற்றிசெய் புதுமலரே
எங்கணும் அருளொளி தங்கிடு மின்னே
எமதுளம் வளர்பொன்னே
இனியசு வைக்கனி நனிமிகு தருவே
இசைதரு சுகவுருவே
தெங்கிள நீரே தேனே பாலே
தீஞ்சுவை யின்ஊற்றே
தென்றலெ னத்தை வந்துள மேவும்
தெள்ளமு தக்காற்றே
முங்கிடு திருவரு ளின்பக் கடலே
முத்தம ளித்தருளே
முத்தரு ளத்தவ சித்திபு ரத்தவ
முத்தம ளித்தருளே.

1. தைவந்து = தடவி

8. மனுமுறை கண்ட வாசக மென்றொரு
மாட்சித ரும் அறநூல்
[1]வள்ளலெ னத்தொடர் ஒழிவிலொ டுக்கம்
வருமொரு பாவிரிநூல்
[2]உனுமுறை தனையருள் தொண்டர் மண்டலம்
ஒற்றொழி விதிதருநூல்



உயிர்களின் மீதருள் தோன்றிய ரும்பிட
[3]உறுபசி நீக்கிடு நூல்
எனுமுறை யாக வுரைநடை நூல்பல
எழுதிய ளித்தபிரான்
எந்தவி லக்கண நூலுமு ணர்ந்திட
எளிதினு ரைத்தமகான்
மனுமுறை இஃதெனும் அருள்வளர் ஜோதி
முத்தம ளித்தருளே
முத்தரு ளத்தவ சித்திபு ரத்தவ
முத்தம ளித்தருளே.

1. வள்ளல் குருராயன் - எனத் தொடங்கும்
ஒழிவிலொடுக்கம் சிறப்புப் பாயிரவிருத்தி.

2. உனுமுறை - ஆராயும் முறை

3. ஜீவகாருண்ய ஒழுக்கம் - 1,2,3

9. அமிழ்தினு மினிய தமிழ்மொழி யதனில்
அகத்திய மேமுதலாய்
அறிஞ ருரைத்தஇ லக்கண நூல்கள்
அனைத்து மறிந்தவரே
கமழ்மண மதுமிகு சங்கப் பெருநூல்
கற்றபெ ரும்புலவ
கம்பனும் வில்லிசி லம்பொடு மேகலை
கண்டக லைக்கடலே
இமிழ்கட லுலகிலி ருக்குமி ருக்கே
எசுர்முத லாந்தேவ

இருடிக ளருளிய வேதம னைத்தும்
இழைத்துணர் தருமிறைவ
மும்மலமொ ழித்திடு வடலூர் முனியே
முத்தம ளித்தருளே
முத்தரு ளத்தவ! சித்திபு ரத்தவ
முத்தம ளித்தருளே.

10. [1]அத்தியு ரித்திடு பித்தன ளித்திடும்
அத்தனெ னும்உரவோன்
ஆறுமுகத்தவ [2]னூறலர் செற்றிடு
வீறுமு கத்தயிலோன்
சத்தமி குத்திடு சித்திய ளித்திடு
சம்பந் தப்பெரியோன்
தமிழறி கடவுளை யொருகுரு வெனநீ
தான்வர வைத்தவனால்
எத்திசை யத்தரு முத்தவெ னச்சொலி
சைத்திடு பத்தனெனா
இறவியெ னும்பெரு மறவிக டந்திடு
துறவியெ னுந்தகையோய்
முத்திய ளித்திடு சித்திபு ரத்தவ
முத்தம ளித்தருளே
முத்தமிழ் வித்தக சித்தரு ளத்தவ
முத்தம ளித்தருளே.

1. அத்தி = யானை
2. ஊறலர் = துன்பம் விளைவிப்பவர்.



## வருகைப் பருவம்

1. கண்ணே வருக கண்மணியே
வருக! கலைச்செல் வாவருக!
கருதற் கெட்டாச் சிவஞானக்
கனியே வருக! தமிழ்மணந்த
பண்ணே வருக பண்ணின் விளை
பயனே வருக சுவைமுதிர்தீம்
பாகே அமிழ்தே வருக அன்பாம்
பண்ணே இன்பே வருக! பர
விண்ணே வருக பத்திநெறி
வித்தே வருக! பிறவியற
வீட்டு நெறியைக் காட்டுமணி
விளக்கே வருக தமியேங்கள்
உண்ணே ராவி யினுமினிக்கும்
ஒருவா வருக வருகவே
ஒப்பில் வடலூர்க் குருபரனே
உவந்து வருக வருகவே (வ - ந) 52

2. தொன்மைப் புலவோ ரிதுவரையும்
சொல்லற் சூரிய வொரு நூற்றுத்
தொன்னூற் றிரண்டு சீர்கொண்ட
தூய செய்யுட் செய்தருளி
முன்வைப் படியாய் வடநூலில்
முழங்கும் மறையை முழுதாக்கி
மூன்றி லொருபங் குத்தமிழை
முதலுக் கயலாம் படியாக்கிப்

பொன்வைப் பனைய தமிழ்மூன் றாய்ப்
பொதிந்து மூன்றாம் அடியினிலே
பொருந்து நான்கே தமிழ்முழுதாய்ப்
புகன்ற புகழ்ச்சிப் பாட்டினிலும்
நன்மைக் குரிய தமிழ்ப்பெருமை
நவின்றோய் வருக வருகவே
நலமார் வடலூர் வள்ளல்குரு
நாதா வருக! வருகவே!

திருவடிப்புகழ்ச்சிப் பாடலமைப்பு

3. தமக்குத் தெரியா ஒருநிலையுந்
தாரணி தன்னில் இலையென்று
தருக்குந் தருக்கே மனிதரது
தரமாய்ப் பலரும் அமைந்திருக்க
சுமைக்கிங் கிடமாய் எழுந்தருளிக்
கடவுட் செயலும் புரிந்தருளிக்
காயம் வீழா தொளியாக்குங்
கடின வழியைக் கைக்கொண்டும்
எமக்குத் தெரியா நிலையெல்லாம்
எளிய வழியில் எடுத்தீந்தும்
எல்லாம் இறைவன் திருவருளால்
இயல்வ தாகும் இதுவன்றி
நமக்குத் தெரியா தெதுவுமென
நவில்வோய் வருக வருகவே
நலமார் வடலூர் வள்ளல்குரு
நாதா வருக வருகவே.

சுமை = பொறுமை, அடக்கம்.



4. கற்றோர் கல்வி யறிவுகொடு
காணற் கொண்ணாப் பேரறிவும்
கல்விக் கடலின் நிலைகட்கோர்
கரைகண் டுணருஞ் சீரறிவும்
உற்றோர் பெரிய முனிவரென
உரைத்த [1]கீரன் வாக்கிற்கே
ஒருசான் றாகத் திகழ்கின்றோய்
உண்மைப் பொருளைப் புகழ்கின்றோய்
மற்றோர் சொல்லேன் [2]மாதேவ
மாலை யொன்றே சாலும்மே
மாண்பும் நோன்பும் மிக்கோயெம்
மட்டாற் சொல்லற் கேலும்மே?
அற்றோர்க் கெல்லா முற்றோயெம்
ஐயா வருக வருகவே
அருள்சேர் வடலூர் அப்பாஎம்
அன்பே வருக வருகவே.

5. சீரார் புகலிச் சம்பந்தர்
செப்புங் கருணை மொழிதன்னைச்
சிறந்த குருவின் மொழியென்று
தெரிந்து கொண்ட நூலோனே
பாரார் போற்ற எங்கெங்கும்
படர்ந்த பற்பன் மொழியுள்ளும்
பாரித்துளநற் கலையெல்லாம்
படியா துணரும் மேலோனே
வாரார் கொங்கை மடவார்தம்
மையல் ஒழித்த வழிதன்னில்

வளருங் கற்ப நெறிநன்கு
வரவும் பெற்ற பெரியோனே
ஏரார் வடலூர் வருவள்ளால்
எம்மான் வருக வருகவே
இரக்க மேதன் உருவான
இறைவா வருக வருகவே.

6. உடம்பும் பிறர்க்குத் தெரியாமல்
ஒளித்து மறைத்துக் கைகட்டி
உயிர்க்குச் சேதம் வாராமல்
உருகி ஒதுங்கி ஓரமதாய்
நடந்த பொழுதில் அடிநிழலும்
நண்ணு நிலத்தில் தோயாமல்
நாரா முள்ளும் நீராறும்
நடுவே துந்தடை யாகாமல்
கடந்து சென்றோய்! சித்தாடல்
காலத் தைவீண் ஆக்கலொடு
கலையே நிலையென் றெண்ணுதலுங்
கடையென் றெள்ளிக் கடவுணிலை
அடைந்து நின்ற வடலூரெம்
ஐயா வருக வருகவே
அன்பின் விழையும் மன்பதைகட்
கருள்வோய் வருக வருகவே.



## வேறு

7. பேசத் தகுமொழி மூவா யிரமிப்
பேருல கினிலுளவே
பேரரு ளாளர்க ளவையுணர் வாரது
பேதையர் தாமறியார்
ஏசுற் றொருநான் மொழியறி சிறியவர்
ஏதோ தோவினவி
இன்னல்விளைத்திட எண்ணிநின் எதிரே
இறுமாப் புடன்வரவும்
கூசுற் றொருசிறு பாலனை யவரெதிர்
கூஉய்வைத் துக்கேட்க
குலவிடு மாறேழ் மொழியறி வேனெது
கொள்ளினுங் கொள்ளுகென
வாய்செற் றழுதனர் வந்தவ ரதனால்
வரமருள் புரிகுருவே
வள்ளலெ னச்சொலும் வடலூர் மணியே
வந்தருள் வந்தருளே.

கூஉய் = அழைத்து

## வேறு

8. [1]செந்தா மரைச்செல்வி [2]செந்தமிழ்ச்
செல்வியொடு
சேரத்து தித்துநிற்கத்
திருவொற்றி யூரில்வளர் வடிவாம்பி கைத்தேவி
திருவுள மிரங்கிவந்து

பைந்தா மரைத்தளிரில் [3]இந்தாரும் அமுதொத்த
பாலன்ன மதனையீந்து
பசியோ டிருப்பதே னுண்டிடுக எந்திருப்
பாலனே யென்று சொல்லித்
தந்தா மரைக் கைகொடு முகமுதுகு தைவந்து
தண்ணளிபு ரிந்த போழ்தில்
தாயுவந் தீந்ததென நீயுவந் துண்டுநற்
றமிழ்மாலை செய்தளித்தாய்
வந்தாரை யீடேற்ற வல்லவட லூர்வள்ளல்
வருகசற் குருவருகவே
வையமுய் யச்செய்ய வழிசொல்லு மையனீ
வருகசற் குருவருகவே

1. திருமகள்

2. கலைமகள்

3. இந்து + ஆரும்; இந்து = சந்திரன்

9. தில்லைப் பெரும்பதியி லன்றுநிக ழாதிரைத்
திருவிழாக் காட்சிகாணத்
திரண்டுவட லூர்வந்த அன்பர்கட் காங்கொரு
திரைச்சீலை தன்னிலந்த
எல்லைப்பெ ரும்வெளி யிலானந்த நிர்த்தமிடும்
இறையவன் மாட்சிதோன்ற
இனியபல காட்சியுங் காட்டிடக் கண்டவர்கள்
இன்பமய மாகிநின்று



தொல்லைவினை தீர்ந்தெங்க ளையனே
அப்பனே
தோன்றிவரு மெம்ஆண்டவ
துரியவெளி நடுநின்ற பெரியபொருள் கண்டவ
ஜோதிமந் திரம்விண்டவ
வல்லையென் றேத்திட ; ஒன்றுமறி யார்போன்று
வாருங்கள் போதுமென்று
வாய்மலர் திருவருட் பிரகாச வள்ளலே
வந்தருள்க வந்தருள்கவே.

10. ஏழைக்கி ரங்கிநா டோறும்ப கிர்ந்தீயும்
இன்னடிசி லாக்கவொருநாள்
எப்பொருளு மில்லையால் என்செய்வோ
மென்றவண்
இருந்தவர் புலம்பிநிற்க
மாழைக்கி ரங்கிடேல் வேண்டியன இறையருள்
வலத்தாற் கிடைக்குமென்று
மவுனமாய் நீயன்று நிட்டைசா தித்தபின்
மாட்டுவண் டிகடம்மிலே
வாழைக்கு ருத்தினொடு காயரிசி பொருளெலாம்
வந்துவந் தேயிறங்க
வருமவரை நின்றவர்க ளீதா ரளித்ததென
வள்ளலா ருத்தரவினால்
தாழைத்தி றந்தெமது தலைவர்தர வந்ததென ;
தாள்பணிந் துலகமேத்துந்

தங்கமே குருராம லிங்கமே நின்னருள்
தந்தருள வந்தருள்கவே.

மாழை = பொன், பொருள்

## 7. அம்புலிப் பருவம்

1. மாதிரம னைத்துமதி யோனெனச் சொல்லலால்
மன்னுயி ரெலாம்புல்லலால்
வண்டமிழ் மொழியெனச் சாந்தந் ததும்பலால்
வள்ளலார் பொருளென்னலால்
சோதிமலை யாமென்று தோன்றலால் நல்லவர்
தொழுதுவழி பாடூன்றலால்
சொல்விளைய வைத்தலால் இன்பமுள வாக்கிமேல்
துன்பந் துடைத்திடுதலால்
வாதிகளு மேத்தலால் வந்துகலை முற்றலால்
மானுவா யென்னநின்னை
வள்ளற்பெ ருங்கருணை யுள்ளத்தி லெண்ணலால்
வருகெனப் பெறு கிறாய்நீ
ஆதிபுர நாதர்வடி வம்பிகைக் கினியனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந் தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.



மதியோன் = சந்திரன், அறிஞன்

நல்லவர் = பெண்கள், சான்றோர்

சொல் = நெல், பாட்டு

வாதி = மருத்துவன், வழக்காளி

மானுவாய் = ஒப்பாவாய்

2. பொன்னையே பின்னையாக் கோடலால் அன்பர்கள்
பூரணைப் பூசைசெயலால்
புத்தமுத மேவலால் நித்தனும் விரும்பலால்
புலவரவர் போற்றுமுறவால்
நின்னையோர் புடையேனு மொப்பென மதித்ததோ
நினைவென்ன வோவறிகிலோம்
நீடுலகின் ஆடியென வூடுநின் றாடிவரும்
நீணிலாக் கற்றைநின்னைத்
தன்னையே தானறிந் தின்பமுற நீயுமொரு
தந்திரஞ் சொலவருகுவாய்
தண்மைமிகு வெண்மதீ யென்றழைத் தானெங்கள்
சன்மார்க்க சங்கநாதன்
அன்னையே ரொற்றிவடி வம்பிகைக் கினியனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந் தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

## வேறு

3. குறைவிலாக் கலைமுற்றும் நிறைமதியன்
இவன்;நீ
குறைந்துமா யுங்கலையினை
கோதுமிகும் ஆணவ இருட்பகைவன் இவன்;நீ
குறித்திடி னுடற்கறையினை!
மறையாது மறியொணாப் பொருளையுணர்
வானிவன்
மறைவாய்ப் பகற்கண் மங்கி!
மதனனை எரித்தவற் கன்புமிகு வானிவன்;
மற்றவற் குறுகவிகைநீ!
இறைபணியைமேற்கொண்டு மகிழ்வனிவன்;
ஓர்பணிக்
கேங்கியஞ் சுங்கோழை நீ!
ஏந்திழையர் மாலுறா யோகியிவன்; இருபதோ
டெழுமாதர் சையோகிநீ!
அறிகிலான் பிறர்பிழையை மதியென
மதித்துளான்
அம்புலீ ஆடவாவே
அருள்வன்வட லூராளி வருகென
விரும்பினான்
அம்புலீ ஆடவாவே.

மறை = வேதம்



## வேறு

4. அண்டாண்ட கோடிபக ரண்டபிர மாண்டங்கள்
அத்தனையும் விண் வெளியிலே
அணுவெனச் சுழல்பவை அறியாது சுற்றும்நீ
அவற்றுளே மிகவுமெளியை
பிண்டாநு பவமுணர் யோகிய ரகத்துளே
பிறையெனத் தோற்றி நிற்பாய்
பேசுமிவை யாவுமேல் பேசரிய நிலையுமெம்
பெருமான் தனைக்கேட்டிடில்
கண்டாநு பவமுடன் கரதலா மலகமாக்
காட்டிக்கொ டுப்பதோடு
கடவுணிலை யுந்தந்து நின்னையொப்
போர்வந்து
கைகூப்பு மாறிருப்பான்
அண்டுதற் கரியதொரு பெருமையா
மிவனழைப்
பம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

5. தான்வந்த நிலவுலகின் உபகிரக மாகநீ
சஞ்சரித் திடுவதலும்
தக்கபல வற்றிலும் மிக்கவரு காமையில்
தானிருக் கின்ற தாலும்

பான்வந்த கதிரவன் ஒன்பது கோடியிரு
பதுலட்சம் மைல்களமேலான்
பார்க்கிலிரு லட்சத்து முப்பதெட் டாயிரம்
படருமைந் நூறுமைல்கள்
வான்வந்த வெளியுளாய் என்றறிந் தும்நினை
வாவெனக் கூறினானெம்
வள்ளற் பெருஞ்சோதி யையனீ வந்திடில்
வரமெலாம் பெற்றுவாழ்வாய்
ஆன்வந்த கருணைவடி வம்பிகைக்
கினியனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

6. இந்தமண் ணுலகினில் நாலிலொரு பங்காய்
இருக்கின்ற சிற்றிடம் நீ
எட்டா யிரம்மைல்கள் எம்பூம நின்னள
விரண்டாய ரம்மைல்களே
குந்துங்கு றுக்களவு மலைமடு விருப்பினும்
கூறுமுயிர் குறைவாயுளவாய்!
குலவுமெம் பூமியைச் சுற்றயத னீழலால்
குன்றிவள ரும்நிலையினை!
இந்தெனும் பெயரினை! சுயவொளியு மற்றனை
இரவலொளி யேபெற்றனை!
இருபதோ டேழு நாள்களுக் கொருமுறை
எம்பூமியைச் சுற்றினை!



அந்தமுற வந்திடில் எந்தநல மும்வரும்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

7. இறையுநல மெய்தாமல் இரவில்வந் தேங்கிடும்
இரவலன் ஈதர் அதனால்
ஈண்டுவரு கற்பனையு மாறுதலு மாந்தருக்
கேய்த்திடுஞ் சிறியவன் நீ!
இறையவன் நலமெலாம் எய்தினோன் எம்மவன்
யாவருக் கெதுவேண்டினும்
ஈந்திடுஞ் சாந்தனடி யார்க்குண்மை யுறுதியும்
ஏய்ந்திடச் செய்பெரியவன்
நிறையருள் வலியாண்மை நேர்மைதிரு
சீர்மையோர்
நிறைகல்வி வாய்மை தூய்மை
நிதியெனப் பெற்றவர் துதிசெயத் தக்கவன்
நின்குறையெ லாம்நீக்குவான்
அறையவரு மேன்மைமிகு செந்தமிழ்ச்
செல்வனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

இறையும் = கொஞ்சம்

நிறைஅருள் = நிறையும், அருளும்

நிறைகல்வி = நிறைந்த கல்வி

8. திங்களைப் போற்றுதும் என்றிசைத் தானஞ்
சிலம்பினை யளித்தமுனிவன்
செஞ்சொலறி புலவரும் வஞ்சியர்மு கத்தினைத்
திங்கள்முகமென்று சொல்வார்
எங்களை யன்முடிப் பிறையென்பர் தென்வர்கள்
இந்துமர பென்று புகல்வார்
இவைதவிர நின்போன் றிளைப்பவர்
தமைக்காணில்
இவனுளந் தாங்கிடாது
துங்கமிகு பெரியோர்கள் சொல்லினைம
தித்திடுந்
தூயவன் இவனாகையால்
துணையென வழைத்துநின் மனதைமகிழ்
வித்திடத்
தோன்றலுள மேன்றுநின்றான்
அங்கனுல கெங்கனுங் தங்குதமி ழாளியுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.



9. வாவெனச் சொல்லியும் வந்திலா னோவென
மைந்தனுங் கேட்ட போழ்தில
வந்தானி தோவெனக் காலவழு வமைதியால்
வழங்கினோம் முன்னரின்று
சேவினுக் குரியனைத் தாவென, சேவகன்
தெண்டனிட் டேத்திநின்று
சிற்றினம் அஞ்சுமாம் பெருமையை என்னுநந்
தேவர்மொழி கேட்டுநைந்து
கோவெனக் கதறினான் கூசிவரு வானெனக்
கூறினா னாதலாலே
கோபமுங் கொண்டிடான் சாபமுந் தந்திடான்
குணமெனுங் குன்றேறினான்
தாவெனும் முன்னரிந் தாவெனும் வள்ளலொடு
தண்மதீ யாடவாவே
சன்மார்க்க சங்கநற் றலைவர்கோ மகனுடன்
தண்மதீ ஆடவாவே.

சே - ரி–ப ராசி

10. மால்தரும் நின்பெயர் மதியமென் றோதுதல்
வஞ்சப்பு கழ்ச்சியணியாம்
மதியெலாந் தந்துள மயலெலாம் நீக்குமெம்
வள்ளற்பிரான் பெயரினைச்
சால்தருந் தண்ணருட் பிரகாச ரென்பது
தகுகார ணக்குறியாதாந்
தன்மையை யுணர்ந்துநீ நன்மைபெற
வேண்டிடில்
சரண்புகுந் திடுகவின்றேல்

ஆல்டிரின் எட்வினீல் ஆம்ஸ்ட்ராங்கு
மைக்கல்போல்
அன்பர்பல ருன்னிடம்பாய்ந்
தடிகொடுமி தித்திடுவர் கொடிகொண்டு குத்திடுவர்
அள்ளுவார் கல்லுமண்ணும்
ஆல்தரும் ஒற்றிவடி வாம்பிகைக் கினியனுடன்
அம்புலீ ஆடவாவே
அருட்பெருஞ்சோதியெந்
தனிப்பெருங்கருணையுடன்
அம்புலீ ஆடவாவே.

ஆல் - ஆதல்

## சிற்றிற் பருவம்

1. சுழுத்தி நிலையி லுருத்தெரியாத்
துயர்க்கே வலத்தா ணவத்தோடத்
துவித மாகக் கிடப்பேமைத்
துயர்தீர்த் தருளுங் கடப்பாட்டான்
இழுத்தோ ரசுத்த மாயையினால்
இயன்ற சகல நிலையதனிலே
இருத்த இருந்தேம்; சுத்தநிலை
எய்தும் நினைக்கீ திழிவேயாம்
பழுத்த அறிஞர் செய்கையைப் போல்
பாலர்விளை யாடிட லியற்கை
பயனா மெங்கட் கெனத்தோன்றும்
பரிசை நீயெங் ஙனமறிவாய்?
அழுத்தும் கற்கள் நின்னடியை



அடியேஞ் சிற்றில் சிதையேலே
அருளுத் தரசிற் சபையோனே
அடியேஞ் சிற்றில் சிதையேலே.

2. சீரார் குடிசைப் பகுதியிலோர்
சிறிய பகுதி தீப்பற்றிச்
சிறிதும் அணையா தோங்குதலும்
தேம்பும் மக்கள் ஏங்குதலும்
பாரா மனது நெகிழ்ந்துருகிப்
பரிந்து தன்மேல் ஆடையினால்
பைய வீசித் தீயதனைப்
பரவா தணைத்தெவ் வுயிருக்கும்
நேரா வின்பம் விளைவித்த
நிமல வடிவே யாஞ்செய்த
நேர்த்தி யற்ற மணல்வீட்டை
நினது கால்கொண் டழியாதே
ஆரா வமுதே சின்னம்மை
அளித்த வள்ளற் பெருமானே
அடியேஞ் சிற்றில் சிதையேலெம்
அன்பே சிற்றில் சிதையேலே.

3. கண்ணிற் படுமிவ் வுருவெல்லாம்
கடவுள் நிலையென் றுணராமல்
கரவும் பொய்யும் வஞ்சனையுங்
கடுத்த முகமுங் கொண்டுடி
மண்ணிற் புகுவோர் தமையெல்லாம்
மனதைத் தெளிவித் தறிவீந்து

மாயைக் கூத்தின் மயல்காட்டி
மன்றக் கூத்தன் செயல்காட்டி
எண்ணற் கொண்ணாப் பேரின்பாம்
இறவாக் கதிதந் தீடேற்ற
எண்ணிக் குறுகுந் திருமேனி
இறைவா நின்றன் கால்நோகும்
திண்ணற் கினிய அன்பாள
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
செல்வம் பெருகும் வடலூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

திண்ணற்கு = கண்ணப்பருக்கு.

## வேறு

4. அம்மையொடு செவிலியுந் தந்தலைவி மேலணங்
கச்சுறுத் தென்றுகொண்டே
யாடறுத் தேடவிழ் முருகனை யழைத்துவெறி
யாடிடச் சூழ்ந்தகாலை
இம்மைய லால்தையல் நொந்தன ளெனத்தோழி
இசைத்திடும் போதிலம்மை
என்னென் றதட்டிடவும் மாவென் றடுக்கினாள்
இருபதுக் கொன்றுகுறைவாய்
வெம்மை மதனஞ்சுமா! வேதனையு மாறுமா
வேந்தனுக் கெட்டுமாவிவ்
வெறியாட் டெனும்பொருள் தொனிக்கவென் றஞ்சொலான்
விளையாடு மையனே நீ
எம்மையிச் சிற்றிலாட் டேனென் றழித்திடுதல்
ஈகையோ நடுவுநிலையோ
ஏர்செய்வட லூராளி நின்பதம் வணங்கியே.
ஏத்தினோம் சிற்றில் சிதையேலே.

5. சாண்பிள்ளை யானாலு மாண்பிள்ளை யென்றுலகு
சாற்றுஞ்சொ லுண்மையாலும்
சன்மார்க்க சங்கமது தாபிக்க வந்தகுரு
சாமிநீ யாதலாலும்
மாண்புமிகும் அம்மானி ராமையா பிள்ளையெம்
மாமிசின் னம்மைசெய்த
மாதவத்தால் வந்த பேரழகு வடிவான
மைந்தனீ யாதலாலும்
காண்பதே பேறெனக் கொள்ளுமெளி யேம்நினைக்
காணத்து டித்துநின்றோம்
கடவுள்நீ வருமளவு சிற்றிலா டுதுமெனக்
கருதித் திரும்பிவிட்டோம்
சேண்வருதல் காணினும் நின்றுதொழுவோம் வெய்ய
செருக்கோ டிருந்ததில்லை
திருவடிவ ருந்திடுங் குருமண லழுத்திடும்
செல்வமே சிற்றில் சிதையேலே.

சேண் - தூரம்

6. மதியமுத முண்டுபர மானந்த வெள்ளத்து
மண்டித் திளைத்திருக்கும்
மாண்பார்ந்த மேலவர் பார்வையிற் கலைஞான
மார்க்கஞ் சிறார்செய் திடும்
வதியுறு மணற்சோறொ டொக்குமென் பாரவ்
வழக்குக் கழிந்திடாமல்
மணல்வீடு கட்டிவிளை யாடினோம் நினதுதிரு
மலரடிவ ருந்தநேரும்
பொதியமலை யமருமுனி இமயமலை
வளருமுனி
புங்கவர் மகிழ்ந்துவாழ்த்தப்
பொதுவென்ப தெவ்வுயிரு மாமென் றுரைத்தபர
போதவே தாந்தகுருவே
திதியருளு மொரு பெருந் திருவருட் பிரகாச
செல்வமே சிற்றில் சிதையேல்
சீராம லிங்கநற் றேசிகா எமையாண்ட
தெய்வமே சிற்றில் சிதையேலே.

சின்னஞ் சிறியவர்கள் செய்த மணற் சோற்றை
யொக்கும்
மன்னுங் கலைஞான மார்க்கம் பராபரமே.
தாயுமானவர்

திதி = நிலைபேறு (திதி பக்கம் நிலைபேறும் பேர் -
நிகண்டு)



## வேறு

7. இலகு மைந்து தொழில் புரிய
எனக்கே தந்தா னென்று சொலும்
எங்கள் பெரும! அத்தொழிலில்
இயற்றுந் தொழிலும் ஒன்றன்றோ!
உலகும் பல்வே றுயிருமவை
ஊக்குந் தொழிலும் உளவாக்கி
உய்யும் படிக்கே உயிர்கள் தமை
உயர்த்தும் நினது சீரடியால்
[1]மலகஞ் சுகத்துச் சிறியேஞ்செய்
மணல்வீ டழித்தல் மரபாமோ?
மல்லல் மிகுக்கும் வயற்பரப்பில்
மாட்டே ருழற்குப் பதிலாகச்
செலவு மிகுந்த [2]பொறிக்கலப்பை
செழிக்கக் கிளரும் மருதூர!
சிறியேஞ் சிற்றில் சிதையேலெம்
செல்வா சிற்றில் சிதையேலே.

1. மல + கஞ்சுகம், கஞ்சுகம் = மெய்ப்பை

2. பொறிக்கலப்பை = இயந்திரக் கலப்பை

8. அதிருங் கழலோன் நின்றாடும்
அழகிய பொதுவின் வடபாலோர்
அரிய பெரிய ஞானசபை
அமைத்துத் தைப்பூ சத்தன்று

கதிரும் மதியுங் கீழ்மேலாக்
கலந்து கண்ணில் நின்றிடவும்
கற்பூ ரத்தின் ஒளிநெற்றிக்
கண்ணா மென்று தோன்றிடவும்
உதிரும் மனிதச் சடலத்தை
ஒளியாய் மாற்றி ஓங்கிடவும்
உலகம் அறியத் தெரிவிப்போய்
உண்மை யெல்லாம் புரிவிப்போய்
[2]குதிரங் கொள்ளா நென்மலைகள்
குவியப் பெறுமம் மருதூரா!
குறியேஞ் சிற்றில் சிதையேலெங்
குருவே சிற்றில் சிதையேலே.

1. கீழ்மேலா = கிழக்கு மேற்காக

2. குதிர் - நெல் முதலிய வைக்குங்கூடு.

9. மதியோர் மதித்துப் புகலும் அருள்
வழியிற் செல்லா துலகியலாம்
மார்க்கத் துழன்று மாழ்கிடுவீர்
வம்மின் உய்ம்மின் என்றுரைத்தும்
கதியே யறியாச் சிறியேம்நின்
கருத்தை மதியாக் கடையரெனக்
கருதா திழைக்கும் மணல்வீட்டைக்
கண்டுட் கோபங் கொண்டாயோ!
நிதியோன் வந்து பணிகேட்கும்
நித்தா வெங்கள் அத்தாவெம்



நெஞ்சங் கவரும் பெம்மான்நீ
நிலையில் உயரும் அம்மான்நீ
திதியேம் உனது பொருளாவேம்
செல்வா சிற்றில் சிதையேலே
தெய்வப் பதியாம் வடலூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

திதி = காத்தல்; நின்னாற் காத்தற்குரியேம்.

10. [1]விருப்பு வெறுப்புற் றானடியை
மேவும் அடியார் தங்கட்கே
மிண்டுந் துன்பம் இலவென்னும்
மேலாம் மறையின் சொல்லுக்கே
ஒருப்பட் டுள்ள சான்றாக
உரைத்தா யிறக்க ஆசையிலை
உலகில் இருக்க ஆசையிலை
ஒன்றும் இல்லை யாலெனவே
கருப்பு வில்லி தனைவென்று
கற்ப நிலையுங் கைகண்டு
கடையே முள்ளந் தனிநின்று
கடவுங் கடவுள் மணியேமேல்
திருப் புகன்ற திருமருதூர்ச்
செல்வா சிற்றில் சிதையேலே
செல்வம் பெருகும் வடலூரா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே.

1. கருப்புவில்லி = மன்மதன்

## சிறுபறைப் பருவம்

1. விரிதரங் கக்கடலின் உளர்வளியின் வெந்தீயன
மேவுமண் ணில்தோன்றியே
விரவும்ஒலி விண்ணினுக் குரியஒலி சடஒலி
விலக்கிமா யாகாரியத்
துருவொலியும் நால்வகை சூக்குமைபை சந்தியோ
டுற்றமத் திமைவைகரி
ஓதுமிவை சிற்றறிவி னர்க்குரிய தெதனினின்
றுற்பத்தி யாகுமோ அப்
பரநாத முங்கண்டு சுகவாரி யில்திளைப்
பவன்நீ அதற்கேற்பவெம்
பாசப் பெருங்கடலில் வீழ்ந்துகரை காணாத
படரினேம் செவிகுளிரவும்
திருவம் பலக்கூத்தன் ஆடலுக் கேற்பவும்
சிறுபறை முழக்கியருளே
சீராம லிங்கவள் ளாலெங்கள் குருநாத
சிறுபறை முழக்கியருளே. (வ-ந)

2. அன்பறிவு பண்பழகு கற்புநா ணாதிசேர்
ஆருயிர்க் காதலாளின்
ஆகமது தோய்ந்தசிற் றின்பந் தனக்குவமை
அம்மம்ம சொல்லவென்றால்
தன்பொருள்ப கிர்ந்தளித் துத்துனது மனையிலே
தானிருந் துண்டதொக்கும்
தரமறிக வென்றுசெந் தமிழ்தந்த வள்ளுவர்
சாற்றினார்; ஐயநீயும்



இன்பமே வடிவாய இறையருட் பேரின்பம்
எற்றோ எனக்கேட்டிடில்
இன்சுவைப் பொருள்கள் பல ஒன்றா யமைத்தளித்
திதனினும் மிக்கதென்றாய்!
தென்புலவர் கேட்டிஃது நன்றென மதித்துளார்
சிறுபறை முழக்கியருளே,
சீராம லிங்கவள் ளாலெங்கள் குருநாத!
சிறுபறை முழக்கி யருளே

3. நன்மார்க்க மாஞ்சுத்த சன்மார்க்க நெறிதன்னை
நன்றா யறிந்திடாமல்
நாவுக்கு ருசியாக வுண்டுன் டுறங்கியும்
நல்லோர்த மைப்பழித்தும்
துன்மார்க்கநெறி செலும் வன்மார்க்க வீணரவர்
சுத்தசன் மார்க்கரென்று
சொல்லிக்கொ ளும்ஒலியும் அன்னார்த
மைச்சேர்ந்த
துட்டர்கை தட்டுமொலியும்
பன்மார்க்க அரசியற் போர்வையை மூடியே
பண்ணாத தீமைபண்ணும்
பாதகர் சிரிப்பொலியும் ஏதிலர் கலக்கொலியும்
பார்விட் டகன்றுபோகச்
சின்மாத்தி ரந்தெரித் தெம்மையாட் கொண்டவா!
சிறுபறை முழக்கியருளே
சீராம லிங்கவள் ளாலெங்கள் குருநாத
சிறுபறை முழக்கியருளே.

## வேறு

4. அசுரவொலி உகரவொலி மகரவொலி பிரணவம்
ஆகிப்பி றங்குமொலியாம்
அவ்வொலியை உள்ளத்தில் உள்ளாமல் உள்ளுமவர்
ஆங்கறிதல் நாதவொலியாம்
பகருமவ் வொலியினைக் கேட்டுருகி மேற்சென்று
பதியிடம் பார்க்க முயல்வோர்
பாராது பார்ப்பதும் கேளாது கேட்பதும்
படியென் றறிந்துமேலாஞ்
சிகரவரை சென்றங்கு பரையோ டிருந்தருள்
செய்கின்ற செய்யவெளியைச்
சித்தா யறிந்துபே ரானந்த மயமான
சிவமா யிருப்பரென்றே
திகழுமொரு சொல்லா லெடுத்துத்தொ டுத்தமுனி
சிறுபறை முழக்கியருளே
சீராம லிங்கவள் ளாலெங்கள் குருநாத
சிறுபறை முழக்கியருளே.

5. யானைபரி அரிமுதல் கொசுகெறும் பீறாய
யாவையுங் கூர்ந்துநோக்கி
யாவுமுண வுண்ணலும் யாநலமும் நண்ணலும்
யாண்டுமுள வாறறிந்தும்
ஊனமிகு பிறவிகள் அனைத்துமா னிடரினும்
உயர்நலம் விழைதலோர்ந்தும்



உயிரிரக் கங்கொளா தவைகொல்ல,
எண்ணுவோர்,
உண்ணநா நீரூறுவோர்
வானையுறு முயர்கொண் டிறந்தாரை மீட்கினும்
மாற்றியாண் பெண்ணாக்கினும்
மாதவஞ் செய்யினும் அவர்புறத் தாரென
மலர்வாய் திறந்துசெய்ய
தேனைநிகர் பாடலறி வித்துவரை கையினால்
சிறுபறை முழக்கியருளே
சீராம லிங்கவள் ளாலெங்கள் குருநாத!
சிறுபறை முழக்கியருளே.

மருவாணைப் பெண்ணாக்கி, என்று தொடங்கும் -
அருட்பா

உயிர்க்கொலயையும் புலைப்புசிப்பும்
உடையவர்களெல்லாம்
உறவினத்தார் அல்லரவர் புறவினத்தார். - அருட்பா

## வேறு

6. தோன்றிற் புகழொடு தோன்றுக வின்றேல்
தோன்றுதல் தீதெனவே
சொல்லிய வள்ளுவர் சொல்லிற் கொருசிலர்
சூதுகள் சூழ்ந்தனரே
ஆன்றவர் போலந டித்திடு கின்றார்
அறிவறி யார்சிலரே

அள்ளித் தருமொருவள்ளல் யாமென
அறிவிப் பார்சிலரே
தேன்றரும் உரையால் செய்தித் தாளில்
தினம்வரு வார்சிலரே
தீயவிளம்பர மும்புக ழென்றுள்
தேர்கின் றாரிவரே
மூன்றுல குந்தொழு வோயிவர் மயலற
முழக்குக சிறுபறையே
முனிவரெ லாம்புகழ் வடலூர் வள்ளால்
முழக்குக சிறுபறையே.

7. கற்பனை யேயிவ் வுலகிய லென்றுட்
காணவு மியலா தார்
கனகமெ னும்பதி யதில்வள ரும்பதி
கண்டுள முருகாதார்
சொற்பன மாகம றைந்திடு மின்பத்
துன்பமி துணராதார்
சுகமிகு மறிவறி துரியநி லைப்படி
தூங்கவு மறியாதார்
அற்பர்க ளிவரொடு நிற்பது மாகா
தகலவி ருந்துனுளே
அரகர சிவசிவ நமவென வோதுதல்
அதுசிவ நெறியெனவே
முற்படு நோன்பால் வந்து புகன்றவ
முழக்குக சிறுபறையே
முனிவரெ லாந்தொழு வடலூர் வள்ளால்
முழக்குக சிறுபறையே.



8. முந்திய பொதுவினில் அம்பிகை யோடம்
முனிவர் தமக்காயும்
முன்னொரு மன்னன் முன்னிய தற்கும்
முதல்வன் தாள்தூக்கி
தந்திமி தோதித் தாதித் தீதித்
தமிதமி தாதூதி
தாந்திமி தந்திமி தகுதகு திகுவென
தான்நின் றாடிடுநாள்
நந்தி முழக்கிடு மத்தள வோசையும்
நாணியி டைந்திடவும்
நானில மெல்லாம் கேட்டிது நன்றாம்
நன்றா மென்றிடவும்
முந்துத மிழ்க்கவி எழுதிய கையால்
முழக்குக சிறுபறையே
முனிவர் வணங்கும் வடலூர் வள்ளல்
முழக்குக சிறுபறையே.

9. உலகமி யங்கிட எண்ணிய நல்லோர்
உருள்பண மாக்கியதை
உணரா தொருவரே யத்தனை யும்பெற்
றுயரநி னைக்கின்றார்;
அலகில பொருளை வைப்புழி யாதஃ
தற்றார் வயிறெனவே
அருமறை சொல்வதை அறியா தாரிவர்
அறிவுதி ருந்திடுக!
விலகிட வுரியவி ரப்பது நாட்டில்
மேவா தேகிடுக

வீரமும் ஈரமும் மானவி வேகமும்
மேவி மகிழ்ந்திடுக.
கொலுமொரு வினையறு கென்றுபு கன்றவ
கொட்டுக சிறுபறையே
குலவிடும் வடலூர் வள்ளற் பெருமான்
கொட்டுக சிறுபறையே.

1. அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி - திருக்குறள்

10. அவரவ ருள்ளத் திறைவனி ருப்பதை
அறியா மையினாலே
அவரவர் வஞ்சனை யாகந டந்தழி
கின்றார் மண்மேலே
அவரவர் செய்யுங் கடமையை யுண்மையொ
டாற்றிடு வதனாலே
அருளொடு பொருளுந் தெருளொடு திறலும்
அணுகிடும் மிகமேலே
எவரெவ ரெத்தொழில் செய்யினும் அதையே
ஈசனின் முன்னாலே
இன்புடன் ஆற்றிடும் அன்புறு பூசனை
என்றுசெய் வதுமேலே
தவமஃதாகும் என்றவ நன்கு
முழங்குக சிறுபறையே.
தமிழ்வளர் வடலூர் ஐயா நன்கு
முழங்குக சிறுபறையே.



## சிறுதேர்ப் பருவம்

1. ஒருபரையொ டியைபரா பரனடிக் கமலத்தில்
உலவாத இன்பநற்றோன்
உண்ணப் பிறந்தளம் பெருமநினை நினைதலால்
உள்ளமின் பத்தில்மூழ்கும்;
பரவுபுன் னகைநிலவு செம்பவள வாய்தரும்
பண்முதிர் சுவைத்தீந்தமிழ்ப்
பாடல்செவி யூடுபுக் குணர்வினைக் கௌவியுயர்
பத்தியின் பத்தமுத்தும்
விரவுசெம் பொருளெளிய நடைகற்க நாவூறி
மேம்படச் சுவையுண்ணுமால்
வேகமிகு சொல்லெலாஞ் சிவமணங் கமழ்தலால்
வேண்டிநா சியுமின்புறும்
திருவடிவ ணங்கவூற் றின்புறும்வி ழிக்கினிய
சிறுதே ருருட்டியருளே.
சித்தாந்த வேதாந்த நாதாந்த போதனே
சிறுதே ருருட்டியருளே. (வ-ந)

2. மருவோங்கு செங்கமல மலர்மகள்ம ணாளனும்
மறையோது மலர்வாயனும்
மாமயில்வி பாவனும் மாடநக ரையனும்
மாதுபா கத்தினானும்
உருவோங்கு கணபதியும் முனிவோரு முற்றபே
ருவகையொடு வாழ்த்திநிற்ப
உட்கவரு தீநடுவில் உட்கார்ந்து நீயன்று
யோகுசெய் கின்றபோழ்தில்

கருவோங்கு மொருவன்வந்
தந்நெருப் பிடறினான்
கால்வெந்து கதறினான்; நீ
கனலெலாம் பட்டுமோ ரிடையூறு மின்றிக்
கடுந்தவம் முடித்தெழுந்தாய்
திருவோங்கு நினதுநிலை சிறியேமு
முறவந்து
சிறுதே ருருட்டியருளே
தெருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.

3. பண்ணாத வினையெலாம் முன்னோடு
பிறவியிற்
பண்ணித் தொலைத் தபவமோ
பாழான விம்மனங் கணமேனு நில்லாது
பதறிக்கு தித்தாடிடும்
எண்ணாது மெண்ணிடும் ஏங்கிடும் தூங்கிடும்
எங்கோ விரைந்தோடிடும்
ஏமாந்து காமந்த சாரசா மாந்தரா
மெய்மைப்பி டித்தாட்டிடும்
உண்ணாது பன்னாள் உறங்காம லேயிருந்
தொருமைமன தாகிநீயும்
உருகியறி வானந்த மயமான தன்மையை
உன்னினா லுயிர்வாடிடும்
திண்ணாய மனமுருக வழிசொல்லு மையநீ
சிறுதே ருருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.



4. வாக்கொழிய மனமொழிய மதியொழிய நிற்பதே
வழியென் றுணர்த்து குருவே
மன்னுமெய் யறிவிலே யுறவாகி நானென்னு
மயமற்ற அந்நெறியிலே
போக்கொழிய வரவொழிய நிறைகுறை
வொழியமேற்
பூரணா காயமாகிப்
பொங்குமா னந்தமாய் நின்றநிலை யிற்கண்ட
புதுமையைப் புகலுதற்குக்
காக்குநிலை ஆக்குநிலை போக்குநிலை
செய்திடுங்
கடவுணிலை கண்டபேரும்
கைகட்டி வாய்பொத்தி மெய்வைத்த சைகையோடு
காணாது நிற்பரதனைத்
தேக்குசெந் தமிழினாற் சொல்லவல் லமையுளாய்
சிறுதேருருட்டியருளே.
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.

5. பட்டமே வேண்டுவார் கட்டமில் லாதுசிலர்
பதவியே வேண்டிநிற்பார்
படியாத புல்லரும் பட்டறிவு ளோர்தமைப்
பார்த்துச் சிரித்திகழுவார்
சட்டங்க ளைக்காட்டி மற்றவரை யேமாற்றித்
தாங்கொணாத் தீமைபுரிவார்
சான்றிதழ் மட்டுமே சம்பளந் தந்திடும்
சரியாக வேலைகள் செயார்

சுட்டறிவி லாதவரும் நாவலர் முதுபுலவர்
சொல்லருட் பாவினரசர்
துறவிமா வித்துவான் அடிகளார் என்றுபெயர்
சூடித்து டித்தாடுவார்
திட்டெலாம் அற்றிவர் சீர்மதி பெற்றிடச்
சிறுதே ருருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே

திட்டு = மேடு, அறியாமை, செருக்கு.

6. அட்டாவ தானியார் கல்விச்செ ருக்கொழி
அன்றி[1]யற் கடிதமெழுதி
அவரெழுத்து [2]தகரவரி என்றவொரு பாடலுக்
கரியபொரு ளுங்கொடுத்து
நிட்டானு பூதியை விரும்புவோர் தத்தமது
[3]நெற்றிக்கு ணேர்விளக்கு
நிற்பதுநி னைந்திடுக நின் னிலைமை
என்னருளின்
[4]நின் றேயு ணர்ந்திடுகமேல்
எட்டாத அத்துவித நிலைதுவித நிலையின்றி
[5]எட்டாத தாகுமென்றும்
இதயமே கோயிலாக் கொண்டுபா மாலையால்
ஏத்துகென வும்புகன்றோய்!
[6]தெட்டாத பேர்க்கன்றி எட்டாத செல்வமே
சிறுதே ருருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.



7. அருட்பெருஞ் சோதி அகவல் ஆயிரமும்
ஆறுநா லடியுமாய் விரவி
அமையவோ ரிரவில் எழுதியுள் ளுருகி
அருமறைப் பொருட்டெரித் தாங்கே
இருட்பெரு நிலையில் இன்னுலுற் றேமும்
இன்புறக் கருணைசெய் இறையே
இதனினும் நினது பெருமையை அறிய
ஏதுவும் பிறிதுவேண் டுதுமோ?
பொருட்பெரு நிலையே நிலையெனக் கருதும்
பொய்ப்பெரு நிலையே நிலையெனக்
கருதும்
பொய்யருக் கெட்டிடாப் பொருளே!
போற்றிடும் [1]புரவலர் திருவே
தெருட்பெரு நிலையிவ் வுலகெலாங் காணச்
சிறுமணித் தேர்விடுத் தருளே
திருவளர்ந் தோங்கும் திடல்வடலூர!
சிறுமணித் தேர்விடுத் தருளே.

8. பிறவாத நிலைபெற்ற பெரியவர்! நின்னையோர்
பிள்ளையாக் கொண்டுயாமும்
பிள்ளைத்த மிழ்பாடல் தக்கதோ! என்றிடில்
பேதையேம் சிலசுறுதும்
இறவாத பெருமானி ராமலிங் கம்பிள்ளை
என்றுலகர் சொல்வதாலும்
ஈசனாரின்பிள்ளை நேசனார் நற்பிள்ளை
இளையபிள்ளை யானென்றுமே

அறவாநின் சொற்களுள் வதனாலும் ஏழையேம்
ஆசையின் மிகுதியாலும்
ஐயாளம் அம்மாவெம் அப்பாநின் பேரருள்
ஆட்கொள்ளு மென்பதாலும்
சிறியேமு ரைத்துளேம் தெய்வமே! தள்ளாது
சிறுதே ருருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.

9. மகமேரு மலைதன்னை வில்லா யெடுத்திந்த
வையமாந் தேரின்மீது
மாதேவ னேறுநாட் கணபதிவ ராமையால்
மட்டேரு மச்சிற்றதாம்
இகமேவு தற்கரிய முத்துநவ ரத்தின
மிழைத்ததேர் நீ பெற்றுளாய்
இனியகனி கடலைபொரி அமுதுமே னும்படைத்
தேத்தினோம் கணபதியையும்
அகமேவு மிவ்வுலகில் எவ்விதத் துன்பமும்
அணுகிடா தைய! நின்பேர்
அன்புடன் சொல்லுவோர் இன்புடன் வாழ்ந்துநல்
ஆன்மஞா னம்பெறுகுவார்
செகமேமு மேத்திடத் திருவுள மகிழ்ந்துநீ
சிறுதே ருருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு மருதூர
சிறுதே ருருட்டியருளே.



10. வாழியென் னாண்டவன் என்றெடுத் தேத்துநின்
வார்கழல் வாழ்கவாழ்க!
வையகம் வாழ்கஇவ் வையகம் போற்றிடும்
வண்டமிழ் நீடுவாழ்க!
ஆழிமலை வண்முகிலும் ஆறுகுளம் ஏரிதரு
ஆவினம் வாழ்க வாழ்க!
அன்புமிகும் உள்ளத்து மக்கள்சேர்ந் தின்பமுற
ஆளும்நல் அரசுவாழ்க!
ஊழிபல செல்லினும் மேன்மேலு மோங்கிய
உன்னருட் பாடல் வாழ்க!
உயிரெலம் வாழ்கஅவ் வுயிரினுக் குயிராகி
ஓங்கிடும் உண்மைவாழ்க!
[2]சேழிடம் வாழ்தருந் தேவரும் வாழ்ந்திடச்
சிறுதேர் உருட்டியருளே
திருவோங்கு தமிழகந் தனிலோங்கு வடலூர
சிறுதே ருருட்டியருளே.;

## வள்ளலார் வரவு நூற்றெட்டு!

சுவாமி சரவணபவானந்தர்

ஓம்

அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!!
தனிப்பெருங் கருணை! அருட்பெருஞ்ஜோதி!

சித்தி

சிவாய ராமலிங்கம் என்னில்,
தீவினைகள் சிந்திடும்
சிவாய ராமலிங்கம் என்னில்,
தேரும் முத்தமிழ் இயல்,
சிவாய ராமலிங்கம் என்னில்
சித்தி ராஜ யோகமும்,
சிவாய ராம லிங்கம் என்னில்
தெய்வ சித்த ஞானியே!

(பன்னீரிலக்கணம், சண்முகம் பிள்ளை)

## வருகை அகவல்

| | | |
|---|---|---|
| 1. | சுடர்மிகும் ஜோதி சொரூபா! | வருக! |
| | வடலூர் அருட்பெரும் வாழ்வே! | வருக! |
| 2. | மருதூர்ப் பகுதியில் மலர்ந்தோய்! | வருக! |
| | வருதூ றகற்றும் வள்ளால்! | வருக! |
| 3. | பன்னுசின் னம்மையின்பாலகா! | வருக! |
| | மன்னுரா மைய மதலாய்! | வருக! |



| | | |
|---|---|---|
| 4. | சுத்தசன் மார்க்கத் துரையே! | வருக! |
| | சத்திய ஞானத் தலைவா! | வருக! |
| 5. | அறமார்ச் சாலை அமைத்தோய்! | வருக! |
| | மறவா தன்மை வடித்தோய்! | வருக! |
| 6. | ஏழைகள் நெஞ்சில் இருப்போய்! | வருக! |
| | பாழைஒழித்தப் பரமே! | வருக! |
| 7. | அருள்வடி வாயமர் அன்பே! | வருக! |
| | குருவடி வாயமர் கோவே! | வருக! |
| 8. | தில்லை மன்றில் சிரித்தோய்! | வருக! |
| | அல்லலை நீக்கி ஆள்வோய்! | வருக! |
| 9. | கச்சிப் புலவன் மெச்சினோய்! | வருக! |
| | அச்சம் அகற்றி அருள்வோய்! | வருக! |
| 10. | இளமையில் கந்தனை ஏற்றோய்! | வருக! |
| | வளமை மிகுதமிழ் வளர்த்தோய்! | வருக! |
| 11. | மரண பயந்தவிர் மருந்தே! | வருக! |
| | பிரணவ உருவே பெட்பே! | வருக! |
| 12. | கருணைக் கடலே கண்ணே! | வருக! |
| | பொருணலம் மிகுத்தப் பொற்பே! | வருக! |
| 13. | இரக்கமே என்னுயிர் என்றோய்! | வருக! |
| | உருகம் உடைய உளத்தோய்! | வருக! |
| 14. | தயவே இறையெனச்சார்ந்தோய்! | வருக! |
| | நயமே ஜெயமென நவின்றோய்! | வருக! |

15. தூங்கா தோங்கிய சுகமே! வருக!
பாங்காரும் ஞானப் பழமே! வருக!

16. அருந்தல் பொருந்தல் அகற்றினோய்! வருக!
திருந்திய மனத்தில் திளைத்தவா! வருக!

17. நினைந்து நினைந்து நெகிழ்ந்தோய்! வருக!
வனைந்து வனைந்து வணங்கினோய்! வருக!

18. ஆறாக் காதலில் அழுந்தினோய்! வருக!
மாறாக் கண்ணீர் வடித்தோய்! வருக!

19. கடவுளை நேரில் கண்டோய்! வருக!
திடமுடன் மெய்யே செப்புவோய்! வருக!

20. அன்பே சிவமாய் அமர்ந்தோய்! வருக!
இன்பப் பெருக்கே! எந்தாய்! வருக!

21. அறிவு மயமாய் ஆனோய்! வருக!
செறிவு நிறைந்த செல்வமே! வருக!

22. ஆரா அமுதே! அரசே! வருக!
பேரா னந்தப் பெருக்கே! வருக!

23. உலக நிலையினை உணர்ந்தோய்! வருக!
கலகச் சமயம் கடந்தோய்! வருக!

24. புலைகொலை தவிர்ந்தப் புண்ணியா! வருக!
விலையிலா கலைமணி வெற்பே! வருக!

25. அமைதியின் உண்மை அறிந்தோய்! வருக!
விமரிசை யாக விளங்குவோய்! வருக!

26. சுத்த சமரசத் தோன்றலே! வருக!
தத்துவ வேத வித்தே! வருக!



27. ஒன்றே தெய்வம் என்றோய்! வருக!
நன்றே செய்ய இன்றே வருக!

28. சாதி மதப்பேய்த் தடிந்தோய் வருக!
நீதி நெறியில் நிற்போய்! வருக!

29. கற்பனைக் கலையினைக் கடிந்தோய் வருக!
சிற்சபைப் பொற்சபைத் தேர்ந்தோய்! வருக!

30. என்போல்பெறுகவென் றியம்பினோய்! வருக!
பொன்போல் பிறர்க்கருள் புரிந்தோய்! வருக!

31. ஆட்டுக்குட்டிக் கருளினோய்! வருக!
பாட்டிற் கிசைந்துப் பாடினோய்! வருக!

32. அரவின் விடத்தை அகற்றினோய்! வருக!
கரவிலா உளத்தின் கரும்பே! வருக!

33. திரிசிர புரத்தார் சிரசே! வருக!
வரிசை மிகுத்திட வந்தோய்! வருக!

34. வண்ணச் சரபம் மகிழ்ந்திட வருக!
அண்ணல் முனிசீப் அகத்தோய்! வருக!

35. நல்லூர் நாவலர் நனவே! வருக!
வல்லூர் தேவர்நன் மதிப்பே! வருக!

36. பொருத்தம் பார்த்துப் புகன்றோய்! வருக!
விருத்தம் பாடி மேவினோய்! வருக!

37. அலங்கல் சூட்டிய ஐயா! வருக!
நலங்கமழ்ப் பெண்ணாய் நடித்தோய்! வருக!

38. கோடையில் உள்ளம் குளிர்ந்தோய்! வருக!
ஆடையில் பெருமணம் ஆனோய்! வருக!

39. வாழையின் வாழைமுன் வரவே! வருக!
மாழை மணிநடம் வாய்த்தோய்! வருக!

40. பார்த்து நினைத்துப் படித்தோய்! வருக!
சேர்த்தே அணைத்துச் சிறந்தோய்! வருக!

41. காழியர்க் கினிய கரும்பே! வருக!
வாழி பாடி வளர்ந்தோய்! வருக!

42. அப்பரின் பெருமை அறிந்தோய் வருக!
செப்பரும் சுந்தரச் செம்மலே! வருக!

43. மணிவா சகரின் வழியோய்! வருக!
அணிமிகும் வாசகத் தாழ்ந்தோய்! வருக!

44. பொதுநெறி தன்னைப் புகழ்ந்தோய்! வருக!
வதுவையும் பெற்று மறந்தோய்! வருக!

45. அம்பலத் தானை நம்பினோய்! வருக!
தம்பலம் தேர்ந்தே தழைத்தோய்! வருக!

46. நால்வரின் பின்திகழ் நாயகா! வருக!
மால்மரு கோனின் மைந்தா! வருக!

47. பெரிய மேடையில் பேசினோய்! வருக!
அரிய சொற்பெருக் காற்றினோய்! வருக!

48. இருமொழிப் புலவரை ஏற்றோய்! வருக!
திருவருட் பாவினைத் தீட்டினோய்! வருக!

49. கோடக ருடனே கூடினோய்! வருக!
ஆடகப் பொன்னே அமுதே! வருக!



50. இறவா வரம்பெற் றிருப்போய்! வருக!
பிறவா நெறியும் பெற்றோய்! வருக!

51. சித்துகள் பற்பல செய்தோய்! வருக!
சத்து நிறை தனித் தங்கமே! வருக!

52. நெருப்பினை அணைத்து நின்றோய்! வருக!
விருப்புடன் தனிமை விழைந்தோய்! வருக!

53. பாண்டிய நாயகப் பலமே வருக!
வேண்டிய படிவிருந் தருந்தினோய்! வருக!

54. பெரிய லட்டினைப் பெற்றோய்! வருக!
உரியவன் முனியென உணர்ந்தோய்! வருக!

55. மழையில் நனையா மன்னே! வருக!
குழையும் மனத்தினைக் கொண்டோய்! வருக!

56. உத்தம மனிதரில் ஒருவா! வருக!
சித்தனின் வாக்கினால் சிறந்தோய்! வருக!

57. படித்தேன் என்றே படித்தோய்! வருக!
வடித்த கண்ணீர் வாரியே! வருக!

58. ஆடவா ரீரென அழைத்தோய்! வருக!
கூடவும் நின்ற குன்றே! வருக!

59. சின்னம் பிடித்தத் திருவே! வருக!
முன்னம் பழுத்த முதலே! வருக!

60. சந்தப் பாடல் தந்தோய்! வருக!
கந்தப் பாவிடம் கற்றோய்! வருக!

| | | |
|---|---|---|
| 61. | தெய்வக் காதலில் திளைத்தோய்! | வருக! |
| | உய்வதற் காவன உரைத்தோய்! | வருக! |
| 62. | ஒற்றியூர் மண்ணில் உறைந்தோய்! | வருக! |
| | முற்றிலும் கனிந்த மூர்த்தியே! | வருக! |
| 63. | தணிகையில் தாகம் தணிந்தோய்! | வருக! |
| | துணிவுடன் பாடித் தொழுதோய்! | வருக! |
| 64. | வடிவாம் பிகையின் மகவே | வருக! |
| | வடிசோ றுண்ட பெரியோய்! | வருக! |
| 65. | ஊற்றெழும் கண்ணீர் உடையோய்! | வருக! |
| | வேற்றறி யாத விபுவே | வருக! |
| 66. | கற்பம் உண்டு களித்தோய்! | வருக! |
| | அற்புதச் சித்தி அடைந்தோய்! | வருக! |
| 67. | உன்னத மாக உதித்தோய்! | வருக! |
| | மன்னுகற் பூரம் மணப்போய்! | வருக! |
| 68. | தண்ணீர் விளக்கினைத் தந்தோய்! | வருக! |
| | எண்ணெய் இன்றி எரித்தோய்! | வருக! |
| 69. | தூண்டினைக் கண்டு துடித்தோய்! | வருக! |
| | மாண்டிட வேண்டா வரமே! | வருக! |
| 70. | ஜீவகா ருண்யத் திறமே | வருக! |
| | தேவரும் மூவரும் செப்புவோய்! | வருக! |
| 71. | சத்திய ஞான சபையோய் | வருக! |
| | நித்திய பூசை நிகழ்ந்திட | வருக! |



| | | |
|---|---|---|
| 72. | கண்ணாடி அமைத்துக் காட்டினோய் | வருக! |
| | உண்ணாடிப் பார்க்க உதவினோய் | வருக! |
| 73. | ஏழு திரைகளை இட்டோய் | வருக! |
| | வாழும் முறையினை வகுத்தோய் | வருக! |
| 74. | மாயை நீங்கிட வைத்தோய் | வருக! |
| | ஆய பயனை அறிந்தோய் | வருக! |
| 75. | தீப ஒளியில் திகழ்வோய் | வருக! |
| | தாபம் அகற்றியதவமே | வருக! |
| 76. | சித்தி வளாகத் தேவே | வருக! |
| | நத்தின பேர்க்கு நல்லோய் | வருக! |
| 77. | அருட்பிர காச அண்ணலே | வருக! |
| | தெருட்பிர காசத் தெளிவே | வருக! |
| 78. | சீர்த்தவ ராஜ சிங்கமே | வருக! |
| | பேர் பெரும் ராம லிங்கமே | வருக! |
| 79. | இதந்தரும் தேகம் எடுத்தோய் | வருக! |
| | சிதம்பர ரகசியம் தெரிந்தோய் | வருக! |
| 80. | கூத்தப்பி ரானுடன் கூடினோய் | வருக! |
| | சாத்திரச் சந்தடி தவிர்ந்தோய் | வருக! |
| 81. | கடையை விரித்தே கட்டினோய் | வருக! |
| | உடையில் மாற்றம் உடையோய் | வருக! |
| 82. | கைகளைச் சேர்த்துக் கட்டினோய் | வருக! |
| | மெய்யினைக் காட்ட வெருவினோய் | வருக! |

83. நம்புமின் என்றே நவின்றோய் வருக!
தெம்புடன் சிலரையே சேர்த்தோய் வருக!

84. கடிகையைச் சுட்டிக் காட்டினீர் வருக!
நொடியினில் உள்ளே நுழைந்தீர் வருக!

85. வருமொரு தருணம் வகுத்தீர் வருக!
பெரும்பயன் உண்டெனப் பேசினீர் வருக!

86. பொன்னுடல் பெற்றப் புகழோய் வருக!
இன்னம் இருந்தருள் ஏந்தலே வருக!

87. புருவ நடுநடம் புரிவோய் வருக!
பருவகாலம் பார்ப்போய் வருக!

88. ஐம்பான் ஆண்டின் ஆண்டகை! வருக!
பைம்புனல் ஓடையைப் பாடினோய்! வருக!

89. பூசத் தரிசனப் புனிதா! வருக!
நேசம் நிறைந்த நின்மலா வருக!

90. தமிழே அமிழ்தெனச் சாற்றினோய் வருக!
கமழும் மணத்தினைக் கண்டோய்! வருக!

91. இசையில் இசைந்தே இருந்தோய் வருக!
திசையெலாம் போற்றிடும் திறத்தோய் வருக!

92. மார்க்க விளக்கம் வரைந்தோய் வருக!
தீர்க்க மாகவே தீட்டினோய் வருக!

93. மகிழ்சற் புத்ர மார்க்கரே வருக!
புகழ் சக மார்க்கப் பொற்பே. வருக!



94. தாச மார்க்க சாமியே வருக!
பூசையிற் கிடைத்தப் பூரணா வருக!

95. ஆன்றசன் மார்க்க அழகரே வருக!
என்ற நிலையெலாம் எய்தினோய் வருக!

96. கலியின் நிலையினைக் கண்டோய் வருக!
நலிவிலா வாழ்க்கை நடத்தினோய் வருக!

97. இணக்கம் மிக்க இறையே வருக!
கணக்கினை அறிந்த கணக்கரே! வருக!

98. அகத்தின் கறுப்பினை அகற்றினோய் வருக!
சுகத்தே இருந்திடத் தோன்றினோய் வருக!

99. தரணி புரிந்த தனமே வருக!
சரணம் சரணம் சரணம் வருக!

100. தேடக் கிடைத்த செல்வமே வருக!
கூடற் கினிய குருவே வருக!

101. பொழுது விடிந்தது புண்ணியா வருக!
தொழுது நிற்கின்றனம் துணைவா வருக!

102. தாயே அனைய தந்தையே வருக!
தூய மனத்துடன் துதித்திட வருக!

103. எங்கும் நிறைந்தே இருப்போய் வருக!
பொங்கும் சாந்திப் பொலிவுற வருக!

104. நல்லோர் எல்லாம் நலம்பெற வருக!
சொல்லே றுழவோர் சுகம் பெற வருக!

105. மனித்த இனத்தின் மாண்பே வருக!
இனித்த மனத்துள் இருப்போய் வருக!

106. மந்திரப் பொருளே வருக வருக!
வந்தனை செய்தோம் வருக வருக!

107. தருணம் இதுவே தயவுடன் வருக!
சரவண குணசற் குருவே வருக!

108. வருக வருக மலரடி சரணம் வருக!
தருக திருவருள் பெருக வருக!

வருக! வருக! வள்ளால் வருக!

அருள்க! அருள்க! அமைதி ஆனந்தம்.

## சரித்திரப் பாமாலைகள்

இயற்றியவர் ஜோதிட வித்வான்
**சே.பா. கோவிந்த படையாச்சி**, வடலூர்.

உலகமது உய்ந்திட உலகினில் வந்தவா
இலகும் ஐந்தொழில் யியற்றிட வந்தவா

சுபானு ஆண்டினில் தோன்றியே வந்தவா
சாபானுக் கிரகம் தானடைந் திட்டவா

புரட்டாசி ஞாயிறு தானடைந் திட்டவா
இருட்டாத ஞான எழில்துறை யேற்றவா

மீன லக்கின மதில் மேன்மையாய் உதித்தவா
ஆனியில்லாது அருள் தேகம் பெற்றவா



சித்திரை உடுவினில் ஜெனனம் தானவா
சித்திகள் பலவும் சேர்ந்திட வந்தவா

ஐந்தா மாதம் அருள் தில்லை சென்றவா
சுந்தர ஞான சுடரொளி கண்டவா

நடராஜ தெரிசனம் நன்மையாய் ஏற்றவா
திடம் பெற தேகத்தைச் செய்துமே கொண்டவா

அப்பைய தீட்சதர் அருள்வாக்கு உற்றவா
ஒப்பிலாஞான ஒளிநெறி பெற்றவா

அறுமுகன் உருவம் ஆடியில் கண்டவா
பெருமை சேர்ஞானம் பின்னியே நின்றவா

அண்ணலின் பிரசங்கம் ஆவன முடித்தவா
வண்ணமாய் நல்ல வாக்கியம் உரைத்தவா

ஒற்றியூர் பெம்மான் உகந்தமுதுற்றவா
பற்றியே பரமனின் பாங்கினைப் பெற்றவா

ஒற்றியூர்ப் பாடல் உகந்தெனச் சொன்னவா
சுத்தியாய் தேகத்தை செய்துமே கொண்டவா

தனக்கோட்டியம்மாள் தன்னை மணந்தவா
மனக்கோணாவகைதனை மாட்சியாய் பெற்றவா

திருவாசகத்தை சீர்பெற படித்தவா
அருள்வாசகம் எனஅன்புடன் ஓர்ந்தவா

எண்ணையில்லாது விளக்கினை எரித்தவா
எண்ணமெல்லாம் ஈசன் இணையடி வைத்தவா

பிடிமண்ணை லிங்கமாய்பெரியாள்கைகொடுத்தவா
அடிமலர் முடியின் மேல் அன்புடன் ஏற்றவா

சதுர்வேத சார சங்கரகம் பெற்றவா
அவதூத சன்யாசி அருள் வாக்கு உற்றவா

சங்கராச்சாரியார் சந்தேகம் தீர்த்தவா
பங்கமில் ஞான பக்குவம் உரைத்தவா

ஆறெழுத்துண்மை முதலியார்க் கீந்தவா
ஐந்தை அடக்கும் அனுபவம் உரைத்தவா

திருமுல்லைவாயில் சீர்பெறச் செய்தவா
பெரும் எல்லை தன்னை பெற்று மகிழ்ந்தவா

ரேணுகை பஞ்சகம் நேர்மையாய்ச் சொன்னவா
ரேணுகை அருளை நேசமாய்ப் பெற்றவா

சுந்தரசுவாமிக்கு சொல்ல முதந்தந்தவா
அந்தமில் சொல்லின்பம் ஆற்றி மகிழ்ந்தவா

வேளூர் பதிகத்தில் உலகநாதனை வைத்தவா
வேளூரான் தயவு வேண்டி அடைந்தவா

சிற்றம்பல ஞானி தெளிவுற உரைத்தவா
உற்றசொல் அமுதஉயர் பொருள் உரைத்தவா

அவதானி செருக்கை அவலமாய் செய்தவா
பவமதை விலக்கும் பண்பினைப் பெற்றவா

வாதப்பித்தோர் வகையுறச் செய்தவா
சாதகமாய்ச் செல்ல தருணம் உரைத்தவா



மழைத்துளி மேற்படா வகைதனை பெற்றவா
தழைத்துமே ஈசன் தனியருள் பெற்றவா

திருநீறால் குஷ்டம் தீர்ந்திடச் செய்தவா
திருநீறால் உலகம் செம்மையாம் என்றவா

புற்றுநோ யதனையும் திருநீறால் போக்கியவா
சற்று நில்லாது தான் விலக்கிட்டவா

சமாதியைக் காட்டி தந்தையை உணர்த்தியவா
அமைதியாய் நோக்கென அன்புடன் உரைத்தவா

வி-த்தை ஞானாக்கினி வென்றிடச் செய்தவா
வி-மாம் ஜனனவேர் களைந் திட்டவா

கூடலூர் சிலர்க்கு கொடும்பயம் தீர்த்தவா
ஆடல் கண்டு அகமகிழ் திட்டவா

ஸ்ரீதர நாயக்கரின் திறமதை வென்றவா
ஸ்ரீதர நாயக்கரை தெளிபெற வைத்தவா

சித்தரால் லட்டு சிலர்க்கு கொடுத்தவா
சத்துள பொருளென தானுரைத் திட்டவா

சக்கிலி பசியை முன் தளர்வினை தீர்த்தவா
பக்குவமாக பின் பலர்க்கும் கொடுத்தவா

கண்வலி ரஸ்தாளியால் கனதையாய் தீர்த்தவா
புண்படாது உடலை புனிதமாய் செய்தவா

புலவர்கள் இருவரின் புன்மையை தீர்த்தவா
கலகமில்லாது கருத்தறி வித்தவா.

வேட்டவலத்தார் வீட்டினிற் சென்றவா
நாட்டமாய் அவர்கள் நல்லிடம் பெற்றவா

எண்ணிய ஆசனம் இனிதுற அமர்ந்தவா
புண்ணிய காரியம் புரிந்து மகிழ்ந்தவா

பிரம்மராட்சசி பிடித்ததை விடுத்தவா
பிர்மானுபவத்தை பெற்று மகிழ்ந்தவா

விபூதியால் மகோதரம் விலகிடச் செய்தவா
அபூர்வ சித்திகள் ஆற்றி மகிழ்ந்தவா

கற்பட்டுஜயா கருத்தினை முடித்தவா
முற்பட்டு ஞானம் முளைத்து எழுந்தவா

வண்டிபின் ஆளாய் வந்துமே காத்தவா
அண்டியே அவர்க்கு அறிவுரை உரைத்தவா

பராபவ ஆண்டு சன்மார்க்க முரைத்தவா
கரவில் ஞானம் கண்டு களித்தவா

வைகாசி பன்னொன்றில் வடற்பதி உற்றவா
குருவார நாளில் தருமச்சாலையை அமைத்தவா

வருவார்க்கு அன்னம் வழங்கி மகிழ்ந்தவா
ஆண்டுதோர் அடுப்பு நீண்டிடும் என்றவா

தூன்டுதல் இலாது துலங்கிடு மென்றவா
மூன்றுபேர் உணவை முன்னூறு பேருக்கீந்தவா

ஈன்ற நற்றாயினும் இனியவை செய்தவா



வேம்பையர் கண்வலி சலமதால் தீர்த்தவா

ஓம்பியே ஞான உயர்நிலை பெற்றவா
சாஸ்திரி நால்வரின் சந்தேகம் தீர்த்தவா.

ஆஸ்தீக முறைதனை அன்புடன் உரைத்தவா
ராமகிருஷ்ணப்பிள்ளை நலிபயம் தீர்த்தவா

பூமகள் தயவினால் புன்மையை தீர்த்தவா
சங்கீதமணி மூவர்க்கு சந்தேகம் தீர்த்தவா

துங்கமாய் நவரத்தின சொல்லால் மகிழ்வித்தவா
அட்சய வருடம் நால் திருமுறை யிட்டவா

சட்சய மக்களின் தகுதியை உரைத்தவா
வேம்பையரிடம் நீல வியாபாரி என்றவா

ஓம்பியே ஈசன் ஒளிநெறி பெற்றவா
சிவராமஜயர்க்கு புத்திரனை அளித்தவா

பவமதை யகற்றும் பண்பினைப் பெற்றவா
வெங்கிடேசய்யரை வடலூரில் நிறுத்தியவா

தங்கியே சபையை தரிசிக்க செய்தவா
நாய்னா ரெட்டியார் மனைநலி தீர்த்தவா.

ஆயகலை அனைத்தும் உணர்த்தவா
சேரியம்மாசியை சீலமாய்ச் செய்தவா

கரிசாலை தூதுளை கனதை யென்றுரைத்தவா
ஆண்டு பிர்சோற்பத்தி ஆலயம் முடித்தவா

தூண்டுதலிலாத ஜோதியாய் நின்றவா
கொடிமரம் சென்னையில் குறித்துமே காட்டியவா

நெடியதோர் ஞான நிலைதனைப் பெற்றவா
கிருஷ்ணய்யர் ராகத்தை கீர்த்தியாய் பாடியவா

வருஷித்து ராக வளமதை உரைத்தவா
புற்றின் பாம்பின் புன்மையை தீர்த்தவா

சற்றில் தெளிந்திட தயவினைக் காட்டியவா
விதானமேல் வேலையில் வீழ்ந்தாரைக் காத்தவா

பதனமாய் தேவத்தை பாங்குறச் செய்தவா
எழுசத்தி எழுதிரை என்றென உரைத்தவா

கழுவிலா பக்தி கண்டு களித்தவா
பகர் கூலிதருக பஞ்சாட்சரம் ஈந்தவா

நிகரிலா ஞான நெறிதனில் நின்றவா
சமய மதங்கள் சரியல்ல என்றவா

எமபய மதனை யிடித்து யெறிந்தவா
தோத்திரஞ் செய்தல் சுகிர்த மென்றுரைத்தவா

சாத்திரப் பூசல் தான் தவிர்த்திட்டவா
சீவகாருணியமே சிறந்தது என்றவா

சீவகாருண்ய சிறப்புரை தந்தவா
பசிப்பிணி யெமன் யென பாங்குற உரைத்தவா

பசிப்பிணியைப் போக்க பக்குவஞ் செய்தவா
இறவா நிலைதனை இனிதுடன் பெற்றவா



உறவா யீசன் உறுதுணை பெற்றவா
ஈரமும், அன்பும் இறையருள் என்றவா

ஈரமாந் தயவின் இனிதுடல் பெற்றவா
கருணையே சிவமென் கருத்தறி வித்தவா

கருணையாஞ் சிவத்தை கண்டு களித்தவா
உருவவழிபாட்டில் மனம்ஒடுங்குமென்றுரைத்தவா

அருவ வழிபாடு ஆன்ம லாபமென்றுரைத்தவா
சீவ தயவே சிவமென் றுரைத்தவா

சீவனே சிவம் என்று தெளிந்தவா
சன்மார்க்க சார்பே தழுதியென் றுரைத்தவா

பன்மார்க்க முடிவே சன்மார்க்க மென்றவா
ஒருமித்த உள்ளம் உயர்வென்றுரைத்தவா

பெருமித்த நல்ல பேரின்பம் என்றவா
கோபம் அடக்கல் குணமென் றுரைத்தவா

கோபம் அடங்கில் கோனாகு மென்றவா
எவ்வுயிர்த் தயவே ஈசன் என்றுரைத்தவா

எவ்வுயிர்த் தமையும் என்னதென்றுரைத்தவா
ஏழையைக் காத்தல் இறைநிலை என்றவா

வாழைப் பெருக்கிடும் வகைதனைப் பெற்றவா
நல்லோர் சொல் வாக்கே நலமென் றுரைத்தவா

நல்லார் பணியே ஞானமென் றுரைத்தவா
ஐம்புல னடக்கல் தெம்பென வுரைத்தவா

ஐம்புல னடக்கி அழகினைப் பெற்றவா
கொல்லா நெறியே குருநெறி என்றவா

வல்லான் னருளை வழகுடன் பெற்றவா
பிறர் மனம் நோகாமை பேரின்பம் என்றவா

அரனிடன் அன்பை அழகுடன் பெற்றவா
மலர்ந்த முகமே நலந்தரும் என்றவா

கலந்து கடவுளின் கதிரொளி பெற்றவா
தீநெறி விடுத்தல் சிறந்த தென்றுரைத்தவா

அறநெறி பெற்று அகமகிழ்ந்திட்டவா
பரோப காரமே பாங்கென வுரைத்தவா

சராசரம் யாவையும் தானாகி நின்றவா
தயவினால் யாவு மேசாருமென் றுரைத்தவா

பயமிலா ஞானபண்பினைப் பெற்றவா
கருணையின் நோக்கே கடவுளென் றுரைத்தவா

பொருளை நன்குணர்ந்து புனிதம தானவா
சன்மார்க்க சங்கம் சதிர்தருமென்றவா

சன்மார்க்கஞ் சார்தல் தகுதி யென்றுரைத்தவா
உள்முகம் நோக்கிட ஒளிர்தரு மென்றவா

வள்ளலை நோக்கியே வள்ளலாய் திகழ்ந்தவா
எவ்வுயிர்த் திரளா எமதுயிர் என்றவா

எவ்வுயிர்த் தேகமும் யென்தேக மென்றவா
நால்வர்கள் துதியே நலமென் றுரைத்தவா



நால்வரை நாடிட நலந்தரு மென்றவா
தோத்திரத்தால் வரும் சுகிர்த மென்றுரைத்தவா

பாத்திர மறிந்து பக்குவம் அடைந்தவா
கடினசொல் நீக்கல் கடவுள் என்றுரைத்தவா

அடிமலர் நோக்கி முடிதனில் நின்றவா
அருட்பா என்னும் அருள்நூலை தந்தவா

பொருப்பாய் சன்மார்க்கப் புதுமணந் தந்தவா
அருட்பா யதனை யறுபிரி வாக்கிய வா

அறுபிரி வதனில் அருள்நிலை வுரைத்தவா
சீவகாருண்ய சிறப்புரை தந்தவா

ஆவலாய் உயிர்க்கு ஆவன யென்றவா
சீவ காருண்ய தெளிவுரை வுரைத்தவா

சீவகாருண்யம் சிறந்தது யென்றவா
மனுமுறை கண்ட வாசக முரைத்தவா

மனு சோழனால் நீதி வரம்பினை விரித்தவா
அருட்பெருஞ்ஜோதி அகவலைத் தந்தவா

அருட்ஜோதி அகவலில் ஐவகை விரித்தவா
அண்ணலின் குணங்களை வண்ணமாய்
வுரைத்தவா

எண்ணருங் குணங்களின் இயல்புரைத்தவா
ஐவகை திறனதை அழகதாய்ச் சொன்னவா

ஐவகை ஒடுங்கும் அதிசய முரைத்தவா
நெஞ்சறி உருத்தலை நேர்மையாய்ச் சொன்னவா

நெஞ்சது நிலைபெற நெறிதனை வுரைத்தவா
விண்ணப்பக் கலிவெண்பாவிளக்கமாய் வுரைத்தவா

எண்ணப் படாத எழில்பொருள் தந்தவா
ஒற்றியூர்ப் பதிகங்கள் உயர்வாகச் சொன்னவா

பற்றியே பரமனின் பண்பினைப் பெற்றவா
திருத்தணிப் பதிகங்கள் செம்மையாய்ச் சொன்னவா

பெருத்திடும் பக்தி பின்னியே நின்றவா
இங்கித மாலையைத் துங்கமாய் சொன்னவா

தங்கமாம் ஈசன் தனியருள் பெற்றவா
கந்த கோட்டத்தினின் கருணையை உரைத்தவா

கந்தனின் உருவம் கண்டு களித்தவா
சோதிட நூலை சுகிர்தமாய்ச் சொன்னவா

வாதிட வந்தவர் வாதினை வென்றவா
அனுபவ மாலையை அன்புடன் உரைத்தவா

அனு அருள் பெற்றிட அயனாகு மென்றவா
நடராஜ பதிமாலை நலமுட னுரைத்தவா

திடம்பெற தேகத்தைச் செய்துமே கொண்டவா
உலகலாம் எனும் ஒரு சொல்லை உணர்ந்தவா

உலகினை இருபத்தி ரெண்டு நூற்றென்றவா
அகவலின் அருள் நிறை யாவையும் உரைத்தவா

பகவனின் திறமையும் பண்பையும் முரைத்தவா
அகவலில் அகர வரிசையைத் தந்தவா



அகர வரிசையில் அரும் பொருள் உரைத்தவா
கோடையில் நலிந்தோர்க்கு குளிர்மழை பெய்தவா

வாடையாய் யாவர்க்கும் மகிழ்ச்சியைத் தந்தவா
ஒழிவிலொடுக்க உயர் பொருளுரைத்தவா
கழுவிலா பக்தி கண்டு களித்தவா

பஞ்சாட் சரத்தால் பகர் சீவனம் தந்தவா
பஞ்சாட்சரமே அஞ்சது என்றவா

புதுப்பேட்டை சவுர்நீர் புனிதமாய்ச் செய்தவா
சதுப்பை நீக்கி சதுர்பெறச் செய்தவா

இராம நாம நற்பதிகம் உரைத்தவா
பூமகள் பெருமையைப் புகழ்ந்து உரைத்தவா

வடிவாம்பிகையின் வல்லபம் வுரைத்தவா
அடிமலர் போற்றியே அவனருள் பெற்றவா

அருட்ஜோதி மந்திரத்தால் அரவிடந் தீர்த்தவா
பொருள் தரும் புனித மந்திர மென்றவா

ஆளாகி வந்து அரும்பயம் தீர்த்தவா
மாளா வினையை மாண்டிடச் செய்தவா

காட்சியாய்த் தரிசனம் காட்டி மறைத்தவா
சாட்சியாய் எங்கும் தானமர்ந்திட்டவா

அங்கத் தனித்தனி காட்டி மறைத்தவா
பங்கமிலா தருள் பரத்தினில் கலந்தவா

ஈயம் வெள்ளியாய் பின் ஈயமாய்ச் செய்தவா
காயம் கரையாது கனகமாய் நின்றவா

கடுக்கனைத் தந்து கள்வனைக் காத்தவா
துடுக்கிடும் உலகத் துடுக்கினை வென்றவா

சித்திவளாகத் திருமாளிகை அமைத்தவா
பத்தியே தீபம் பாங்குற அமைத்தவா

ஸ்ரீமுக தைமதி மாளிகை உற்றவா
அஸ்தி மாறாமலே அருள் தேகம் பெற்றவா

உன்னருள் உலகெலாம் ஓங்கிட நிறைந்தவா
பன்னெடுங் காலம் பாங்குரும் என்றவா

சன்மார்க்க காலம் தழைத்திடும் என்றவா
நன்மார்க்கர் யாவரும் நலம்பெறும் என்றவா.

## சுவாமிகள் வருகைப் பதிகம்

அருள் தரும் ராமலிங்க ஐயா வா வா
ஆராத பசி நீக்கும் அண்ணா வா வா
இருள் கடிந்த யிறையவனே யிப்போ வா வா
எழில்ஞான பண்டிதனே யிங்கே வா வா
குரு நிலையில் மேலவனே குறிப்பாய் வா வா
குவலயத்தில் பெரும் ஞானக் குன்றே வா வா
பெருகியதோர் பேரன்பு பெற்றோய் வா வா
புண்ணியனே ராமலிங்க புனித தேவே



பசி நீக்கல பக்குவமென்று ரைத்தோய் வா வா
பசி யேமனென்றுதைத்த பண்பே வா வா
வகிகரமாம் ஞான பொருள் வழங்க வா வா
வடிவேலன் பெருங் கருணை வடைந்தோய் வா வா
நிசி யாகும் பெருமோகம் நீத்தோய் வா வா
நினைப்பார் தன்னிலைமுடிக்கும்நெடி யோய் வா வா
அசிநிலையும் அதன் மேநிலையும் அறிந்தோய் வா வா
அன்பார்ந்த ராமலிங்க அமல தேவா.

உலக மெலாம் வோங்குதற்கு உதித்தோய் வா வா
உயர் ஞான பண்டிதனே ஒளியே வா வா
கலகமிலா பார்வையுளோர் காண வா வா
காருண்ய பார்வையுளோர் காண வா வா
இலகிடுமேல் எழில் ஞான இன்பே வா வா
எக்காலு ந்தயா வடிவோய் என்முன் வா வா
விலகாது மேல் சென்ற வெளியே வா வா
வேதாந்த ராமலிங்க விமலத் தேவே

அகவலெனும் அருள் நூலை அறைந்தோய் வா வா
அகவலிலே ஐம்பூதம் அமைத்தோய் வா வா
பகவினிட பண்புரைத்த பாங்கே வா வா
பாராதிலைந்தைந்து பகர்ந்தோய் வா வா
சகமேமுந் துதித்திடுமோர் சதிரே வா வா
சாட்சிதனை காட்சியுறக் கண்டோய் வா வா
இகத்தினலே யாவர்களும இறைஞ்ச வா வா
எழில ராமலிங்கனெனும் இன்பத் தேவே.

அருட்சோதி ஆலயத்தை அமைத்தோய் வா வா
அதிலேழு திரை காண வைத்தோய் வா வா
இருள் விலக ஞானச்சுடர் ஏந்தி வா வா
ஈடிலா யின்பந்தர இன்றே வா வா
மருள் கடிந்த மனந்தொளிரும் மன்னே வா வா
மாதேவமாலை யொன்றை வரைந்தோய் வா வா
பொருள் தரும் சன்மார்க்கம் புகழ வா வா
புண்ணியனே ராமலிங்கபுனித தேவே

கடவுள் நிலை திடம் பெறவே காட்ட வா வா
காலோடு தலைகாட்டி காக்க வா வா
உடலாதி திடம்பெறவே உயர்த்த வா வா
உன்னருளே உலகமெலாம் ஓங்க வா வா
வடற்பதியை வளம்பெறவே வைத்தோய் வா வா
வழகான திடஞானி வள்ளல் வா வா
அடர் மலத்தை கெடுத்தவனே வா வா
அன்பார்ந்த ராமலிங்க அமலத் தேவே.

அமலா நானிமலமுற அரசே வா வா
ஆற்ற வொண்ணாபந்த மதை மாற்ற வா வா
விமலாவே வேதாந்த முடியோய் வா வா
வித்வ சிகாமணி யென்னை காக்க வா வா
நமனாதீ சேராது நாடி வா வா
நான்மறையின் அந்தம் வளர் நல்லோய் வா வா
சமயமது காத்திடவே சதிராய் வா வா
சாமியே ராமலிங்க தயவாந் தேவே.



விண்ணிலைக்கு மேல் வளரும் வேந்தே வா வா
விளக்கமுற சன்மார்க்கம் விரித்தோய் வா வா
மண்ணுலகில் மாட்சியுற்ற மகானே வா வா
மா கோடிசனம் போற்றும் மன்னே வா வா
எண்ணரிய சித்திநிலை பெற்றோய் வா வா
ஏகாந்தத் தனிலமர்ந்த இறையே வா வா
பொன்னாக தேகமதை பெற்றோய் வா வா
புண்ணியனே ராமலிங்க புனிதத் தேவே.

பாசவினை பற்றறுத்த பாங்கே வா வா
பண்புடையோர் மனத்தமரும் பரமே வா வா
ஈசநிலைதனை யடைந்த எந்தாய் வா வா
என் மனதில் விலகாது இருக்க வா வா
நாசமிலா ஞானநிலை நல்க வா வா
நல்லார்கள் கண்டிடவே நாடி வா வா
வாசிபடி மீதேறி வலுத்தோய் வா வா
வள்ளல் எனும் ராமலிங்கவழகாந் தேவே.

உனைப்பாட வுதவிதந்த ஒன்றே வா வா
உயிரிரக்கம் பெற்றுவந்த உண்மை வா வா
அனையாக சர்வசன அன்பே வா வா
அகில முளோர் வாழ்க என்ற அரசே வா வா
நினைவதிலே சன்மார்க்கம் நிலைத்தோய் வா வா
நிமிடமும் அன்னிலை மாறா நெடியோய் வா வா
எனையாள என்மனதில் இருக்க வா வா
எழில் வாய்ந்த இராமலிங்க இன்பத் தேவே.

வள்ளல் எனும் ராமலிங்கம் வா வா வா வா
வளம் பெற்ற பெருஞானி வா வா வா வா
தெள்ளியதோர் திடஞானி வா வா வா வா
தீராத வின நீத்தோய் வா வா வா வா
கொள்ளக் கிடையா பசும் பொன்னே வா வா வா வா
குறையிலா நிறை மனத்தோய் வா வா வா வா
தெள்ளியதோர் நூல் தந்தோய் வா வா வா வா
ஸ்ரீ ராமலிங்க னெனுந்தேவ தேவே.

உலகந் தழைக்க வந்தவனே வா வா வா வா
உயர் பொருளைத் தந்தவனே வா வா வா வா
கலகமிலா மனத்தவனே வா வா வா வா
கல்யாண குணத்தவனே வா வா வா வா
பலசமயம் நீத்தவனே வா வா வா வா
படியேறி வாழ்பவனே வா வா வா வா
இலகிடு நற்குணத்தவனே வா வா வா வா
எனையாள வந்திடுவீர் எழிலாந் தேவே.

சன்மார்க்கம் தலைதூக்க தரணி தன்னில்
தான் வந்த தற்பரனே வா வா வா வா
பன்மார்க்கம் சன்மார்க்க மாக்கவேதான்
படிதனிலே வந்தவனே வா வா வா வா
நன் மார்க்கர் நலம் பெறவே நாடி வந்த
நல்லவனே ராமலிங்கம் வா வா வா வா
துன்மார்க்கர் துலைவேரி தோன்றி வந்த
தூய பரிசுத்த முளோய் வாழ்க வாழ்கவே.



## வள்ளலார் வருகைப் பதிகம்

எந்தை வருக இராமலிங்க
இறையே வருக எழில் மிகுந்த
தந்தை வருக தயவே வுருவாம்
சாமி வருக தரணி தன்னில்
வந்தோய் வருக வடற்பதியின்
வாழ்வே வருக வள்ளலிலே
மூத்தோய் வருக இராமலிங்க
முதல்வா வருக வருகவே.

வேந்தே வருக வியனுலக
வியப்பே வருக மேருவொத்த
சாந்தே வருக சன்மார்க்கத்
தலைவா வருக சற்சனர்கள்
பாந்தே வருக பழமறைகள்
பகர்ந்தோய் வருக பாரில்வசி
ஆர்ந்தோய் வருக இராமலிங்க
ஐயா வருக வருகவே.

முதல்வா வருக மோகமெல்லாம்
முதித்தோய் வருக மூதுலகின்
சதமே வருக தயா வடிவாந்
தந்தை வருக தாரணியின்
பதமே வருக பக்தி நெறி
பகர்ந்தோய் வருக பாரதனின்
இதமே வருக இராமலிங்க
எந்தாய் வருக வருகவே.

பொன்னே வருக புலவர் புகழ்
பொற்பே வருக புதுமணமாம்
மன்னே வருக பண்ணுலகின்
மாட்சி வருக மகான்கள் தொழும்
அண்ணே வருக மனக் கவலை
ஆற்ற வருக அழகொளிசேர்
கண்ணே வருக இராமலிங்க
கடவுள் வருக வருகவே.

மணியே வருக மா அயோக
மன்னா வருக மலமெரித்த
துணிவே வருக துயர் நீக்கும்
துரையே வருக சொல்லமுத
கனிவே வருக கலைகளெல்லாம்
கற்றோய் வருக காருண்ய
இனியோய் வருக இராமலிங்க
இறையே வருக வருகவே.

தேவே வருக செம்மை நிலை
தெரிந்தோய் வருக திமிர் நீக்கும்
பாவே வருக பக்தி நெறி
பண்பே வருக பசி நீக்கும்
கோவே வருக குறை நீக்கும்
குன்றே வருக குறைவு படா
நாவே வருக இராமலிங்க
நல்லோய் வருக வருகவே.



அண்ணே வருக அதிசயமாம்
அப்பா வருக அருள் நிலையின்
கண்ணே வருக காருண்ய
கடவுள் வருக காணரிதாம்
விண்ணே வருக வேதாந்த
விளைவே வருக வினையெரித்த
ஒண்ணே வருக இராமலிங்க
உயர்வே வருக வருகவே.

நேசா வருக நெடிய வினை
நீத்தோய் வருக நிமிர் சடையின்
தாசா வருக தாரணியின்
தலைவா வருக சன்மார்க்க
ஈசா வருக இனியதயை
எந்தாய் வருகஇனி பிறவா
வாசா வருக இராமலிங்க
வள்ளல் வருக வருகவே

தயவே வருக தயை மிகுந்த
சாமி வருக சற்சனர்கள்
நயமே வருக நாதாந்த
நாட்டோய் வருக நல்லனவாம்
செயலே வருக தீமையிலா
செம்மல் வருக செயல் கடந்த
வுயர்வே வருக இராமலிங்க
ஒன்றே வருக வருகவே.

மெய்யா வருக மேன்மைதரு
வேந்தே வருக வியனுலக
அய்யா வருக அழிவில்லாத
அப்பா வருக அன்பர் தொழு
துய்யா வருக துரைராச
தோன்றல் வருக துயர்நீத்த
கையா வருக இராமலிங்க
கடவுள் வருக வருகவே

கரும்பே வருக கலைகளெல்லாம்
கற்றோய் வருக கதிர் மணமாம்
அரும்பே வருக அதியோக
அண்ணா வருக அகிலமதின்
பெரும்பேர் வருக பிழை நீத்த
பெரியோய் வருக புண்ணியனாம்
நரும்பேர் வருக இராமலிங்க
நல்லோய் வருக வருகவே

ஜோதி வருக ஜோதி நிலை
சூழ்ந்தோய் வருக சூரியவெளி
ஆதீ வருக அகிலமதின்
அப்பா வருக அன்பர்தொழு
நீதி வருக நேர்மையிலே
நின்றோய் வருக நெடிய குரு
வாதி வருக இராமலிங்க
வள்ளல் வருக வருகவே.



## ❀ போற்றிப் பதிகம் ❀

போற்றி யேற்றி புகழ்ந்திட பூமியில்
ஏற்ற மெய்திடும் இன்பமுந் துய்த்திடும்
மாற்றான் றன்வினை மாண்டு மடிந்திடும்
சாற்றி நீயும் சதாகாலம் யேற்றிடே.

ஏற்றமாகிய இராமலிங்கே சனை
நாற்றமும் போ நானுந்துதித்திட
சாற்றுதற் கரிதாகிய ஞானமும்
மாற்றலிலாது மனங்குடி கொள்ளுமே

வள்ளல் இராமலிங்கனை வாழ்த்திட
கள்ளமா மனம் வெள்ளைய தாகிடும்
துள்ளல் காமமும் தூர விலகிடும்
வள்ளலாகவே வாழ்குவை மனனே.

மனனே ஏழ்பவ மாற்றி மகிழ்ந்திட
தினமும் இராமலிங்கேசனை செப்பிட
கனவிலும் காமம் காணா தொழிந்திடும்
நினைவில் இராமலிங்கனை வைத்திடே

### இரங்கல் மாலை

சிந்தை னைந்துதியக்குரு மாந்தர்காள்
எந்தையாம் ஸ்ரீராமலிங்கேசனை
சிந்தை யேத்தி தியானிக்க முன்பு செய்
பந்தமாம் வினையாவும் பரந்திடே

ஆடல் கண்டு அருள் பெற்ற மாதவன்
நீடலாகு திருமுறை தன்னையே
பாடலேற்றி பணிந்திட நம்வினை
ஓடுமென்பது வுண்மைய தாகுமே

ஆகும் யெண்ணிய அற்புத காக்ஷியாம்
போகுந் தீய புராதன பாவமும்
வேகும் வனிதையர் வெய்ய தீ காமமும்
வாகுசேர் இராமலிங்கனை வாழ்த்தவே

கண்ணீர் வடித்து கலங்கிடு மாந்தர்காள்
புண்ணிய இராமலிங்கேசனைப் போற்றிட
எண்ணியபடி ஏற்றமளித்திடும்
நண்ணி நீயும் நலம்பெறப் போற்றிடே

ஆடல் ஆடும் அரும்பத மவரையே
நீடலாக நினைந்திட நீள்பவம்
வாடல் கொண்டு வலிமை குறைந்துமே
ஓடுமென்பது உண்மையதாமதே.

உண்மை மாதவன் வொளிநெறி பெற்றவன்
நன்மை யென்பன நாளும் புரிந்தவன்
கன்மபாவனை கழற்றி யெறிந்தவன்
திண்மை இராமலிங்கனை செப்பிடே

வாழ்க வாழ்க நம்வள்ளலைப் போற்றுவோம்
சூழ்க சூழ்க துரைராசனாகலாம்
ஆழ்க ஆழ்க அருந்தமிழ் அந்தமும்
சூழும் சூழ்க துயரிலை மனனே.



வறுமை நோயினால் வாடு மனிதர்கள்
பெருமை இராமலிங்கனை பேசிட
திருவு வந்துமே செம்மைய தாகிடும்
அருமையாகவே அவனடி போற்றிடே.

சத்துரு தந்திடும் சஞ்சலத்தால் மனம்
பித்து கொண்டு பிதற்றிடு மாந்தர்காள்
உத்தமோத்தம உயர் இராமலிங்கனை
சித்த மேற்றிதி யானிக்க நன்மையே

ஆசை நோயினால் அலைப்படு மாந்தர்காள்
ஆசை நீங்கி அருள் பெறவேண்டுமால்
ஈசனாம் இராமலிங்கனை யேற்றிட
ஆசை நாசமாய் ஆய்விடும் உண்மையே

தீயகாரியம் செய்வதற் கெண்ணீயே
மாயு மாந்தர்காள் வளமுற கேட்டீர்
ஆய நன்கலையாவும் உணர்ந்திட்ட
தூய இராமலிங்கனை சொல்லிடே

பொறாமை முற்றிய புகழிலா மாந்தர்காள்
சராசரம் போற்றிடும் சற்குருவாகிய
நிராமய இராமலிங்கனை போற்றிட
சராசர மீதினில் சகலமுன் வருகுமால்

சஞ்சலத்தால் நிதந்தயங்கிடு மாந்தர்காள்
வஞ்ச சஞ்சலம் மாண்டு மடிந்திட
தஞ்சமாம் இராமலிங்கனை சார்ந்துமே
கொஞ்சுவாய் இராமலிங்கனைக் கூறியே

கோபம் பாபம் கொடும்பகை சூனியம்
தாபம் சங்கடம் சத்துரு கஷ்டமும்
தீபமாம் இராமலிங்கனைச் செப்பிட
தீபமாம் ஜெக ஜோதியால் விலகுமே

உத்தம இராமலிங்கனை வோதிட
சத்திய நெறியுடன் தளரா ஞானமும்
பக்தியே நலந்தரும் பாங்கது கூடிடும்
சத்தியம் சத்தியம் சத்தியமாமீதே

❀

## அருட்பாவின் சிறப்பு !

வையகத்தில் நமை நாடுந்தீமையெலாந்
கொடூரமெலாம் வந்து வந்து
நையல்தரும் பகையாவும் நலிவுதரு
விரோதமெலாம் நானிலத்தில்
துய்யதொரு அருள் இராமலிங்கனாற்
தான் வுரைத்த தூயநூலாம்
மெய்யருட்பா தன் பாட்டில்
ஒருவரியை தியானிக்க விலகிப்போமே

புலவர் புகழ் இராமலிங்கம் புதுமணமாய்
தன்வாக்கால் புகன்றவேத
கலகமிலா புகழ் நூலில் கருத்தூன்றி
ஒருபாட்டைக் கண்யமாக



வலமுடனே வழகுடனே வாயார
யாம்பாட வையமீது
பலமுடனே பண்புடனே பளிங்கு
மெத்தை மேல்மாடி படருந்தானே

புண்ணியனும் இராமலிங்கன் வாய்மலர்ந்த
அருட்பாவாம் புண்ணியநூலில்
எண்ணரிய பலபாக்கள் தனிலொன்றை
இன்பமுடன் யேற்றிப் போற்ற
மண்ணிறையின் மயக்கொழித்து மாட்சி
யுறும் வானிலையின் ஆட்சி தந்து
விண்ணவர்கள் தொழுதேற்றும் வெட்டவெளி
ஞானசுடர் மேவுவாரே.

பலதுறையில் பறந்தோடும் பாழ்மனதை
வெல்வதற்கு பக்குவங் கேளீர்
நிலமதிலே நெடியவனாம் நீள்யோக
ஞானியெனும் நிமலன் சொன்ன
பலமிகுந்த அருட்பாவில் பண்புள்
பல்லாயிரமாம் பாக்கள் ஒன்றை
நலமாக நாள்தோறும் ஒருவரியை
நாடமனம் நன்மையாமே.

மங்களமாக நீயும்
திங்களாய் வளர வேண்டில்
பங்கமாம் உலக பந்தம்
பழுதுடன் மாளவேண்டில்
அங்கையிற் கனிபோலீசன்

அவனருள் அடைய வேண்டில்
துங்கமாம் இராமலிங்கன்
சொல்லருட்பாவை போற்றே

பெருமைமிகு இராமலிங்கன் தான்வரைந்த
அருட்பாவாம் புனித நூலில்
அருமையுடன் ஒரு பாட்டில் ஒருவரியை
வறுமை பிணி வருசூது விரோதமொடு
சாக்காடு வாராதென்று
திருவுடைய சே.பா. கோவிந்த
நவன் செப்பினானால்.

❀



## பேரன்புக்கண்ணி

கற்றதென்றுஞ் சாகாத கல்வி என்று கண்டு கொண்டுன்
அற்புதத் சிற்றம்பலத்தில் அன்பு வைத்தேன் ஐயாவே
ஈடணைகள் நீக்கி நமக்கின் பளிக்கும் என்று மன்றில்
ஆடுந்திருவடிக்கே ஆசை வைத்தேன் ஐயாவே
நானந்த மெய்தா நலம் பெறவே எண்ணி மன்றில்
ஆனந்த நாடகத்துக் கன்பு வைத்தேன் ஐயாவே
வாடலறச் சாகா வரம் கொடுக்கும் என்று மன்றில்
ஆடலடிப்பொன்மலர்க்கே அன்பு வைத்தேன் ஐயாவே
பொற்புறவே பொன்றாப் பொருளளிக்கும் என்று மன்றில்
அற்புதப் பொற்சேவடிக்கே அன்பு வைத்தேன் ஐயாவே
ஈன மறுத்தென்றும் இறவாமை நல்குமென்றே
ஞானமணி மன்றிடத்தே நண்பு வைத்தேன் ஐயாவே
ஓர்துணை நின் பொன்னடி என்றுன்னுகின்றேன் உன்னையன்றி
யார்துணையும் வேண்டேன் என் அன்புடைய ஐயாவே

பூசை செய்து பெற்ற உன்றன் பொன்னடிமேலன்றி அயல்
ஆசை ஒன்றும் யில்லையெனக் கன்புடைய ஐயாவே

இச்சை நின்மேலன்றி யெனக் கெள்ளளவும் வேறுமொன்றில்
இச்சையிலை நின்னாணை என்னருமை ஐயாவே

எப்படி நின்னுள்ளம் இருக்கின்ற தென்னளவில்
அப்படி நீ செய்க எனக்கன்புடைய ஐயாவே

எவ்வண்ணம் நின் கருத்திங் கென்னளவில் எண்ணியதோ
அவ்வண்ணம் செய்க எனக்கன்புடைய ஐயாவே

மாசறு நின் பொன்னருளாம் மாமணி பெற்றாடவுள்ளே
ஆசை பொங்குகின்ற தெனக் கன்புடைய ஐயாவே

நாசமிலா நின் அருளாம் ஞான மருந்துண்ண உள்ளே
ஆசை பொங்குகின்றது எனக்கன்புடைய ஐயாவே

பெரியவர் என்ற பெயரைக் கொண்டோர்
விரித்துக் கூறிய தெய்வந் தன்னைத்
திரித்துக் கூறிய பொய்க்கதை என்று
பிரித்துக் காட்டிய பேரறிவாளா அருட்பிரகாச

எரிக்கும் வினைகள் எனை விட்டோட
அரிக்கும் மாயையும் அகன்றே போகக்
கரிக்கும் ஆணவம் கழன்றே விலகச்
சிரிக்கும் வாழ்வை எனக்கே அருள்வாய்

அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர் கட்கெல்லாம் நானன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்ஙனும் நான் சென்றே
எந்தை நினதருட் புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேநிலைமேல் சுத்தசிவ மார்க்கம் திகழ்ந்தோங்க
அருட்ஜோதி செலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவ நின்னைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

அருளா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
அணுத்துணையுஞ் சினங்காமம் அடையாமை வேண்டும்
மருளாய உலகமெலா மருணீங்கி ஞான
மன்றிடத்தே வள்ளலுனை வாழ்த்தியிடல் வேண்டும்
இருளாமையுறல் வேண்டும் எனையடுத்தார் சுகம் வாய்ந்
திடல் வேண்டும் எவ்வுயிரும் இன்படைதல் வேண்டும்
பொருளாமோர் திருவடி விலுடையாயும் நானும்
புணர்ந்து கலந்தொன்றாகிப் பொருந்துதல் வேண்டுவனே.



திருவளர் வடலூர்ச் செழும்பதி யமர்ந்த உருவளர் ஞான ஒளியே போற்றி
யான் செய்யும் பிழைகள் யாவும் நீ பொறுத்துன் தேன் செய் பதாம்புயும்
சேர்த்தருள் போற்றி
பேதவானந்த பூரணனே எனக்காதரவாகி வந்தருள்க போற்றி
என்னையும் பொருளாய் ஏற்று நின் பாதசந்நிதி வைத்தருள்தாயே
போற்றி

நின்பத நேய நிலைஇய என்னைச் சன்மார்க்கத்தில் சார்த்துக போற்றி
சற்குரு ராய தயாநிதி போற்றி எற்கிருள் ஒழித்த இறையே போற்றி
போற்றி போற்றி நின் புணைதருமடி மலர் போற்றி
என்னுள் தடம் பூத்து வாழியவே.

வாராத வல்வினை நோய் வந்தாலும் வன்மையொடு
சேராத பாவமெல்லாம் சேர்ந்தாலும் தீராதென்றார்
சொன்னார் எங்களருட் பிரகாசப் பெருமான்
பேர் சொன்னாற் போமேபிணி.

பென்னாலே சூழுலகம் புகழுகின்ற இராமலிங்கப் புனிதஞான
மன்னாலே வாய்மலர்ந்த மன்னருட்பா மாமுறையை
மகிழ்வினொடு
சொன்னாலே நாவினிக்கும் கேட்டாலே உளமினிக்கும் துதித்த
பேர்க்கு
முன்னாலே செய்தவினை முற்றொழிந்து கை கூடும்
மோக்கந்தானே

வந்தருள் புரிக விரைந்தித்து தருணம்
மாமணி மன்றிலே ஞான
சுந்தர வடிவச் சோதியாய் விளங்கும்
சுத்த சன்மார்க்க சற்குருவே

தந்தருள் புரிக வரமெலாம் வல்ல
தனி யருட் ஜோதியை யெனது
சிந்தையில் புணர்ப்பித் தென்னெடுங் கலந்தே
செய்துவித் தருள்க செய்வகையே

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி யருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்
வாம ஜோதி சோம ஜோதி வான ஜோதி ஞான ஜோதி
மாக ஜோதி யோக ஜோதி வாத ஜோதி நாத ஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி ஏறு ஜோதி வீறு ஜோதி
ஏக ஜோதி ஏக ஜோதி ஏக ஜோதி ஏக ஜோதி
ஆதி நீதி வேதனே ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதனே வாழ்க வாழ்க நாதனே

சற்குரு நாதா சற்குரு நாதா சன்மார்க்க
சங்கம் தழைக்க அருள் தாதா
குற்றம் புரிதல் எனக்கியல்பே குணமாய்க் கொள்ளல் உனக்கியல்பே
சிற்றம் பலவா இனிச்சிறியேன் செப்பு முகமன் யாதுளது
தெற்றென்றடியேன் சிந்தைதனைத் தெளிவித் தச்சம் துயர் தீர்த்தே
இற்றைப் பொழுதே அருட்ஜோதி ஈக தருணம் இதுவாமே.

அருட்ஜோதி ஆனேன்றறையப்பா முரசு
அருளாட்சி பெற்றேனென்று அறையப்பா முரசு
மருட்சார்புதீர்ந்தேனென்று அறையப்பா முரசு
மரணந் தவிர்ந்தேனென்று அறையப்பா முரசு



எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப, விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைத்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும். எல்லாமாகிய தனிப்பெருந்தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே தேவரீர் திருவருட் பெருங்கருணைக்கு வந்தனம் வந்தனம்.

நிதியே என்னுள்ள நிறைவே பொதுவில் நிறைந்த சிவ
பதியே அருட்பெருஞ்ஜோதியனே அம்பலம் விளங்கும்
கதியே என் கண்ணுங் கருத்தும் களிக்கக் கலந்துகொண்ட
மதியே அமுத மழையே நின் பேரருள் வாழியவே
வாழி எனைத் தூக்கி வைத்த கரதலங்கள்
வாழி எல்லாம் வல்ல மணிமன்றம் வாழி நடம்
வாழி அருட்ஜோதி வாழி நடராஜன்
வாழி சிவஞான வழி.
வாழி என்னாண்டவன் வாழி எங்கோனருள் வாய்மை என்றும்
வாழி எம்மான் புகழ் வாழி என்னாதன் மலர்ப் பதங்கள்
வாழி மெய்ச் சுத்த சன்மார்க்கப் பெரு நெறி மாண்பு கொண்டு
வாழி இவ்வையமும் வானமும் மற்றவும் வாழியவே!

வாழி வடற் சிற்சபையில் வாய்ந்த நடராஜரருள்
வாழி யவண் பூசிக்கும் மாதவர்கள் வாழி என்றும்
வள்ளல் இராமலிங்கமன்னடியார்களெலாம்
புள்ளலிலா இன்பமியைந்தே

பண்ணிய பூசை நிறைந்தது சிற்றம்பல நடங்கண்டு
எண்ணிய எண்ணம் பலித்தன மெய்யின்பம் எய்திய தோர்
தண்ணிய லார முதுண்டனன் கண்டனன் சாமியை நான்
நண்ணிய புண்ணியம் என்னுரைக்கேன் இந்த நானிலத்தே!

நான் செய்த புண்ணியம் என்னுரைக்கேன் பொது நண்ணிய தோர்
வான் செய்த மாமணி என்கையில் பெற்று நல்வாழ் வடைந்தேன்
ஊன் செய்த தேகம் ஒளிவடிவாகி நின்றோங்குகின்றேன்
கோன் செய்த இச்சை குனிக்கவல்லார் எவர் கூறுமினே.

அருட்பெருஞ்ஜோதி   அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி
திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம்
வள்ளல் மலரடி வாழ்க வாழ்க
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி
திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம்

♦ௐ♦